
# விடிவெள்ளி

கவிஞர்
க.பே.முத்தையா
பதிவுகள்....!

அருட்பணி. இ. ராஜ்குமார்



# விடிவெள்ளி

## க.பே.முத்தையா

## நூற்குறிப்பு


| | | |
|---|---|---|
| விடயம் | - | க.பே.முத்தையா வரலாறு |
| நூல் | - | விடிவெள்ளி க.பே.முத்தையா பதிவுகள் |
| ஆசிரியர் | - | வண. I. இராஜ்குமார் |
| பக்கம் | - | 80 |
| வெளியீடு | - | காவேரி கலா மன்றம் |
| பிரதிகள் | - | 300 |
| பதிப்புரிமை | - | காவேரி கலா மன்றம் |
| அச்சுப்பதிப்பு | - | வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. |

# ஆசியுரை

வண. இந்திரதாஸ் இராஜ்குமார் எழுதிய "விடிவெள்ளி"யின் வாழ்க்கைக் குறிப்புக்கள் நூலாக வெளிவருவதனையறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

"விடிவெள்ளி" க.பே.முத்தையா நமது நாட்டில் தோன்றிய மிகச்சிறந்த கிறிஸ்தவ கவிஞர்களில் ஒருவர். கிறிஸ்தவ கவிஞர் எச்.ஏ.கிருஷ்ணபிள்ளையைப் போல சடுதியாக இயேசுபெருமானைத் தமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தாம் வாழ்ந்த காலமெல்லாம் இயேசுவைப் பாடி பரவசமடைந்தவர். அவருடைய பாடல்களில் கிறிஸ்தவ இறையியல், ஆழ்ந்த பக்தி, தெளிவு, யாவரும் விரும்பக்கூடிய சந்தம் என்பனவற்றைப் பார்க்கக் காணலாம். அவர் இயற்றிய கூட்டுப்பிரார்த்தனைகள் நமது திருச்சபையின் அசைக்க முடியாத சொத்து. க.பே.முத்தையா தமிழ் நாட்டிற் பிறந்திருந்தால், வேதநாயக சாஸ்திரியார், மரியான் உபதேயார், எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை போன்றவர்களைப் போல் உலகின் கிறிஸ்தவ மகாகவிகளில் ஒருவராகப் போற்றப்பட்டிருப்பார். க.பே.முத்தையாவும் சின்னண்ணன் இயேசுசகாயமும் கவித்திறன் கொண்ட பக்திக் கவிஞர்கள். க.பே.முத்தையா மறைந்து ஐம்பது வருடங்களாகின்றன. இப்பொழுது அவருக்கு விழாவெடுத்து

உலகத்தாருக்கு அவரின் பெருமையை அறிவிப்பது திருச்சபைக்கு மட்டுமன்றி தமிழ்கூறு நல்லுலகத்திற்கும் செய்யப்படும் அருந்தொண்டாகும். சின்னண்ணன் இயேசு சகாயத்திற்கும் வருடாந்தம் விழாவெடுக்கப்படல் வேண்டுமென நவாலி திருச்சபையாருக்கு எழுதியிருந்தேன்.

ஐம்பது வயது மட்டுமே வாழ்ந்த க.பே.முத்தையா கவிஞராக மட்டுமன்றி ஏனைய மதத்தவர்களும் போற்றும் வண்ணம் வாழ்ந்த பண்பாளர். ஏனைய மதத்தவர்களோடு நெருங்கிப்பழகி பல பொதுப்பணிகளில் ஈடுபட்டவர். ஆனால் இறுதிவரை தந்தை செல்வாவைப்போல கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாக நின்று பிறமதத்தவரோடு சேர்ந்து நற்பணிகளைச் செய்து முடித்தவர். யாழ்ப்பாணத்தில் ஒரு கிறிஸ்தவன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை தம் நடத்தையால் காட்டியவர்.

இக்கவிஞர் பெருமானின் வரலாற்றுக் குறிப்புக்கள். "விடிவெள்ளி" என்ற தலைப்புடன் வெளிவருகின்றது. இந்த நூல் க.பே.முத்தையா மீது மக்களின் ஆர்வத்தைத் தூண்டுமென்பதிற் சந்தேகமில்லை. இதனைப் படிப்பவர்கள் க.பே.முத்தையா பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அந்தத் தூயவனின் பெருமையை உலகத்தார் அறியச் செய்ய வேண்டும். க.பே.முத்தையா மறைந்து விட்டார். அவருடைய பாடல்கள் நம்மோடிருக்கின்றன. அவற்றைப் பாதுகாத்து பிற்சந்ததியாருக்கு வழங்குவோம்.

இதனை என் மாணவன் அருட்பணி.இ.ராஜ்குமார் எழுதியுள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

அதி.வண.கலாநிதி.எஸ்.ஜெபநேசன்
இளைப்பாறிய ஆயர்,
தென்னிந்திய திருச்சபை.

# அணிந்துரை

விடிவெள்ளி என அழைக்கப்பட்ட கவிஞர். க. பே. முத்தையாவைப் பற்றிய நூலொன்று வெளிவருவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். க. பே. முத்தையா பயிற்றப்பட்ட தமிழாசிரியர் ஐம்பதுகள் அறுபதுகளிலே தமிழ்க்கல்வியிற் கோலோச்சியவர்கள் தமிழ் ஆசிரியர்களே எனலாம். இக்காலத்துப் பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் பல்பரிமாண ஆளுமை உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். ஆங்கிலக்கல்வி பெறுவதற்குரிய பொருளாதார வசதி கிடைக்காததினால் கூர்ந்த மதியுள்ள பலர் தமிழாசிரியர்கள் ஆகவேண்டியதாயிற்று.

பயிற்றப்பட்ட தமிழாசிரியர்களில் சிலர் பின்னர் ஆங்கிலத்தைப் பயின்று பீ.ஏ, எம். ஏ பட்டம் பெற்ற வரலாறும் உண்டு. தமிழாசிரியர்கள் குறைந்த வேதனத்துடன் நிறைந்த

பணியாற்றியவர்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டிலே உயர்கல்வி, உயர் பதவி பெற்றவரின் குடும்பப்பின்னணியை நோக்கினால் அவர்களின் பெற்றோர் தமிழாசிரியர்களாகவே இருப்பர்.

ஆழ்ந்தகன்ற தமிழ்ப்புலமையுடன் விளங்கிய தமிழாசிரியர்கள் பலர் சமய, சமூகப் பணிகளிலும் ஈடுபாடு காட்டி உழைத்து வந்துள்ளனர்.

இந்தப் பின்னணியிலே தான் விடிவெள்ளி க.பே.முத்தையாவை நோக்க வேண்டும். வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள உடுத்துறைக் கிராமத்திலே பிறந்து வளர்ந்தவர் விடிவெள்ளி, அக்காலத்திலே உடுத்துறை, மருதங்கேணி, தாளையடி முதலான இடங்களிலே ஒருகலைப் பாரம்பரியமும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் பருத்தித்துறை நகர்ப்பாடசாலைகளில் கற்று உயர் பதவி வகித்தமையும் குறிப்பிடத்தக்கது.

சைவச்சூழலிலே பிறந்த முத்தையா ஆசிரிய பயிற்சியோடு கிறிஸ்தவத்துள் பிரவேசிக்கிறார். அக்காலத்தில் பலர் இவ்வாறு கிறிஸ்தவத்தைத் தழுவியுள்ளனர். பயிற்றப்பட்ட தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய க.பே.முத்தையா மிகச் சிறந்த ஆசிரியராக விளங்கினார். சிறந்த மேடைப் பேச்சாளராகத் திகழ்ந்த இவர் நகைச்சுவையுடன் பேசும் திறன் கைவரப் பெற்றவர் என இவரது பேச்சை கேட்டோர் கூறுவர்.

எனது ஆரம்பகாலத் தமிழாசிரியர் அ.தா.சுப்பிரமணியம் அவர்கள் க.பே.முத்தையா பற்றி வகுப்பிலே அடிக்கடி பிரஸ்தாபிப்பார். நல்ல சரீரவாகும் சாரீரவளமும் கொண்ட க.பே. முத்தையா நல்ல பலநூல்களை எழுதியுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு என அவர் எழுதிய 'தமிழ் அறிவு' என்னும் நூல் எமக்குப் பாடப்புத்தகமாக இருந்தது.

நம்மைப் பொறுத்தவரையில் நான் தமிழை இரசித்துப் படிக்கவும், பிற்காலத்திலே தமிழை எனது சிறப்புத்துறையாகக் கொள்ளவும் இவரது 'தமிழ் அறிவு' என்னும் நூலே காரணம் எனலாம்.

இன்றைய மாணவர்கள் தமிழ்மொழி இலக்கண, இலக்கியங்களை இலகுவாகக் கற்றுத்தேறத் 'தமிழ் அறிவு' நூல் பெரிதும் உதவும். அந்நூல் மீள் பதிப்புச் செய்யப்பட வேண்டும். இந்நூல் தமிழைப் பிழையின்றி எழுதவும், பேசவும் மாணவருக்கு வழிகாட்டும். அத்துடன் கவிதை இரசனையை ஏற்படுத்தும் வகையிலே தந்துள்ளார். கவிதைகள் மாத்திரமின்றிப் பழமொழிகள், மரபுத் தொடர்கள் முதலானவற்றோடு மேலைப்புல அறிஞர்களின் பொன்மொழிகளையும் இந்நூலிலே தொகுத்துத் தந்துள்ளார்.

விடிவெள்ளியும், யாழ்ஜெயமும் அக்காலத்திலே புகழ்பெற்ற கவிஞர்களாக விளங்கியவர்கள். இருவரும் நண்பர்கள்.

உண்மையான கிறிஸ்தவர்களாக விளங்கிய இவர்கள் சமய பேதமின்றித் தமிழ்மொழியையும் தமிழ் இலக்கியத்தையும், தமிழ் அறிஞர்களையும் நேசித்தவர்கள்.

திரு.க.பே.முத்தையா அவர்களைப் பற்றி அருட்பணி. இ.ராஜ்குமார் அவர்கள் ஒரு நூலை எழுதியுள்ளமை பாராட்டிற்குரியது. இலை மறை காயாகத் திகழ்ந்த கிறிஸ்தவ கவிஞர்களின் பணியையும் சிறப்பையும் வண இராஜ்குமார் இன்னும் எழுதவேண்டுமென்று அவாவுறுகின்றேன்.

பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா
முன்னைநாள் தமிழ்த்துறைத்தலைவர்,
யாழ் பல்கலைக்கழகம்.

# முன்னுரை

எனது இறையியல் கல்வியின் பகுதி நேரத்தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நான் மேற்கொண்டே ஆய்வு தான் அமரர்.கந்தையா பேதுரு முத்தையா எனும் "விடிவெள்ளி" பற்றியது.

கிறிஸ்தவத்தை சுதேச மயப்படுத்துவதற்கும், தமிழை வளர்த்துப் பாதுகாப்பதிலும் அவர் எடுத்த முயற்சிகள் அநேகம்.

கிறிஸ்தவமும் செந்தமிழினுடைய சமுதாய உணர்வுகளும் அடிக்கடி சோதனைக்குள்ளாகி வருகின்ற இன்றைய காலகட்டத்தில் "விடிவெள்ளி" அவர்களுடைய

பாடல்களும், கட்டுரைகளும், கிறிஸ்தவ தமிழ் சமுதாய உணர்வுக்கு உரமாய் பயன்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

விடிவெள்ளி அவர்கள் ஈழத்து வானில் இருந்து மறைந்து ஐம்பது ஆண்டுகளைக் கடந்த சூழலில், அவருக்கு நூற்றாண்டு எடுக்கும் இத்தருணத்தில் அவரைக் குறித்த எனது ஆய்வின் சில பகுதிகள் புத்தகமாக "விடிவெள்ளி பதிவுகள்" என்ற பெயரில் வெளிவருகின்றது.

மேலும் இதனை சிறு நூலாகப் பதிப்பிக்கும்படி என்னை உற்சாகப்படுத்தி, ஒத்துழைப்பு நல்கிய நண்பர் அருட்பணி T.S.யோசுவா அவர்கட்கு எனது நன்றிகள்.

முத்தாய்ப்பாக இந்நூலுக்கு நல்லதோர் ஆசியுரையினைத் தந்து என்றும் என்னை நல்வழிகாட்டும் மகாகனம் பேராயர் S.ஜெபநேசன் அவர்கட்கும், நூலுக்கு அழகியதோர் நுழைவாயிலாக மங்களமான ஒரு அணிந்துரையை நல்கியிருப்பவர் மதிப்பிற்குரிய பேராசிரியர். கலாநிதி. எஸ்.சிவலிங்கராஜா (முன்னைநாள் தமிழ்த்துறை தலைவர், யாழ் பல்கலைக்கழகம்) அவர்கட்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள் என்றென்றும் உரியதாகும். குறித்த கால நேரத்தில் இந்நூலை அச்சுப்பதிவு செய்த வேழன் பதிப்பகத்தாருக்கும் பணியாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி**
**வாழிய வாழியவே**
**வானமளந்த தனைத்தும் அளந்திடும்**
**வண்மொழி வாழியவே**

**அருட்பணி இ.ராஜ்குமார்**

## உதயமாகும் விடிவெள்ளியின் வாழ்க்கைப் பயணம்

பிறந்த விதமும் வளர்ந்த கதையும்:-

"அன்புக் கடலே அருள்முகிலே
அம்மை யப்ப னாகிவரும்
இன்பப் பரனே இதயமதில்
இனிக்கும் தேனே ஒளிப்பிழம்பே
துன்பக் கடலுக் கொருபுனையே
துயரப் பணிக்குச் சூரியனே
நின்பொற் றளெம் சிந்தையிலே
நிறுவிப் பணிய அருளுகவே"

இலங்கைத் தீவு முழுமைக்குரிய பெயராக இலங்காபுரி, ஈழம் எனும் பெயர்கள் பண்டைக் காலம் தொட்டு வழங்கி வந்துள்ளன. பல்வேறு பெயர்களினால் இலங்கை பூர்வ காலந்தொட்டே விழிக்கப்பட்டு வருகின்ற போதிலும் இவ்விரு பெயர்களும் இன்று வரை நிலைத்து நிற்கும் சிறப்பினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை என்ற பெயரால் இந்நாடு முழுவதும் இன்றுவரை அழைக்கப்படுவதே இலங்காபுரியின் மங்காத புகழை இன்றும் நிலை நிறுத்துகின்றது. "ஈழம்" என்ற பெயரால் இலங்கை அழைக்கப்பட்டமையைப் பண்டையத்தமிழ் இலக்கியங்கள், பழைய கல்வெட்டுக்கள், புராதனக் கதைகள் என்பன உறுதிப்படுத்துகின்றன.

பண்டைய இலங்கையின் வட பெரும் பகுதி நாகதீபம் என அழைக்கப்பட்டு வரலாயிற்று. இதன் அமைவிடத்தைப் பார்க்கின்ற போது கதம்ப நதி என்றழைக்கப்பட்ட அருவி ஆற்றுக்கு வடக்கேயுள்ள பிரதேசம் தான் நாகதீபம் எனப்பட்டது. இந்நாகதீபத்தில் தான் யாழ்ப்பாணக் குடாநாடும் அதன் அயல் தீவுகளும் அடங்கியிருந்தன. பண்டைய காலத்தில் முழு இலங்கையும் அழைக்கப் பாவிக்கப்பட்ட ஈழம் என்ற சொல் காலப்போக்கில் இலங்கைத் தமிழ் மக்கள் சகலரினதும் பண்பாட்டுத்

தனித்துவத்தைப் புலப்படுத்துவதாய் தமிழகத்துடன் இணைத்துப் பார்க்கப்பட முடியாத அதன் தனித்துவங்களை வற்புறுத்துவதாய் இலங்கை முழுவதையும் ஒரு "தேச" அலகாகக் காணும் ஒரு கருதுகோளாக அமைந்திருந்தது. ஆனால் கால வெள்ளத்தில் ஈழம் என்ற சொல் மருவி தமிழ்ப் பயன்பாட்டிலும் சர்வதேசியக் குறிப்பீட்டிலும், "ஈழம்" என்பது இலங்கைத் தமிழ் மக்களின் ஒடுங்கற்பாடு காரணமாகக் கிளம்பிய ஓர் அரசியல் போராட்டத்தின் குறியீடாக அமைந்துள்ளது. இன்றைய நிலையில் "ஈழம்" என்னும் சொல் இலங்கைத் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடமான வடக்கு, கிழக்கு மாநில இணை நிலையின்மையே குறிப்பாகவுள்ளது.

வடபகுதியான யாழ்ப்பாணத்தைப் பார்க்கின்ற போது அது தமிழர் தம் மொழியினையும், தனித்துவமான அவர்களின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கின்ற இடமாக இருக்கின்றது. எமது ஆய்வின் நாயகனான க.பே.முத்தையாவின் காலத்துக்குள் நாங்கள் வருகின்ற போது அன்றைய நாட்களில் வடபகுதியான யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட சமூக, பொருளாதார நிலைமையினைப் பார்க்கின்ற போது போர்த்துக்கீசரும், அதன் பின் ஒல்லாந்தரும் தங்கள் ஆதிக்கத்தை இங்கே நிலைப்படுத்தியிருந்தனர். அதன் பின் ஆங்கிலேயர் எமது நாட்டை நிர்வாக அலகுகளாகப் பிரித்தும், யாப்புக்கள் வரைந்தும் எமது நாட்டை ஆண்டார்கள். இது ஒரு பக்கம் நடைபெற்றது. மறுபக்கம் மேலைநாட்டிலிருந்து வந்த மிஷனரிமார் தமது மதப் பிரசாரத்தையும், மேலைநாட்டவருக்குரிய பாணியில் கல்விச் சாலைகள் அமைத்தும் கல்வி புகட்டிக் கொண்டும், சமூக சீர்திருத்தத்தையும் கொண்டு வந்தார்கள். 1660ம் ஆண்டுத் தரவுகளின் படி பார்ப்போமானால் யாழ்ப்பாண மக்கள் அனைவரும் பெயரளவில் டச்சுச் சீர்திருத்தச் சபையினராகின்ற நிலையினைக் காணக் கூடியதாகவுள்ளது. எனவே கிறிஸ்தவ மதம் பலராலும் அறியப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது. அத்துடன் சமுதாய வாழ்வில் சமயப் போட்டிகளும், மேனாட்டுக் கல்வியினால், ஒரு முதலாம் வர்க்கத்தினரும் எழ முற்பட்டதை அறிந்து கொள்ளக் கூடிய நிலையினைக் காணலாம். கல்வித்துறை, பத்திரிகைத்துறை, இலக்கியத்துறை, சமயத்துறை, நீதித்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் மேலைத்தேயவர்களின் பிரதிபலிப்பே காணப்பட்டது.

எனவே காலத்தின் தேவையை அறிந்து பல சுதேசிகள் கீழைத்தேய முறையினை நாளாந்த வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டும் என முழக்கம் செய்வதைக் காண்கின்றோம். அவர்களில் மங்களநாயகம், தம்பையா, ஆனல்ட் சதாசிவம்பிள்ளை, சி.வை.தாமோதரம்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர் எனச் சிலரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். சுதேச அபிமானம் என்பது ஒருவன் தன் சுயதேசத்தின் மேனிலையையும், நல்வாழ்வையும், நன்மையையும், உண்மையாய் ஆசித்துச் சீவிப்பதாகும். மேலைத்தேய நாடுகளில் அப்பேறபட்ட அநேகர் சீவித்துப் போயிருக்கின்றார்கள். "ஜோான் ஒப் ஆர்க், கரிபோல்டி" போன்றவர்கள் உண்மையான சுதேச அபிமானிகள். யார் உண்மையான சுதேசபிமானியெனப் பார்க்க வேண்டுமாயின் அவர்களிடம் இருவிதத் தன்மைகள் காணப்பட வேண்டும். முதலாவது அவன் தன் சுய தேசத்தின் நிலையை நன்றாய் அறிய வேண்டும். இரண்டாவது தன் தேசத்தின் முன்னேற்றத்தைக் கெடுக்கின்ற காரணிகள் எவை என அறிதல் வேண்டும். இவ்விரு தன்மைகளைத் தன்னகத்தே கொண்டதாகவே க.பே.முத்தையாவின் சுதேசபிமானம் காணப்படுகின்றது.

அமரர் க. பே. முத்தையாவினுடைய பிறப்பிடத்தையும், பிறப்பின் வரலாற்றையும் பார்க்கின்றபோது அவர் யாழ்ப்பாணக் குடா நாட்டில், யாழ்ப்பாணப் பட்டினத்துக்குக் கிழக்கே 33 மைல் தூரத்தில் பளை எனும் இடத்திலிருந்து கிழக்கே 9 மைல் தூரத்தில் அமைந்துவிட்ட உடுத்துறை என்னும் ஒரு குக்கிராமம் உண்டு. இக்கிராமமே க.பே.முத்தையா அவர்களின் பிறப்பிடமாகும். இக்கிராமத்துக்கு மேற்குப் பக்கம் வத்திராயன் எனும் கிராமமும், மருதங்கேணி எனும் கிராமமும், கிழக்கே ஆழியவளை எனும் கிராமமும் உள்ளன. வடக்கே ஒரு கடலுண்டு. தெற்கே ஒரு உப்பாறுண்டு. அழகிய வெண்மணற் செறிவும், குறு மரங்களும், செழித்த வயல் நிலங்களும், சிறு பயிர்த் தோட்டங்களும் நிறைந்த கிராமம் இது. தென்னையும், பனையும் எங்கும் காணப்படும். மிகுதியானவர்களின் விசேட தொழில் மீன் பிடித்தலே ஆகும். ஆண்டவரின் பாதம் சிவக்க நடந்து திரிந்த தீரு, சீதோன் பட்டணங்களைப் போன்ற அழகிய கடற்கரையை அண்டிய கிராமமாகும். இவ்வகைச் சிறப்பை எல்லாம் தன்னகத்தே கொண்டதாக உடுத்துறைக் கிராமம் காணப்படுகின்றது.

இக்கிராமம் யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்கள் போன்று இல்லாமல் கலை அறிவிலும், நாகரிகத்திலும் சற்றுப் பின் தங்கியதாகவே காணப்பட்டது. கந்தையாவினதும் பொன்னாச்சியினுடையதும் தாம்பத்திய வாழ்வின் நிறைவாகவும், கடைசி மகனாகவும், இக்கிராமத்தின் சிறப்பு எங்கும் ஒளிவீச 1914ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி பிறந்தார் முத்தையா எனும் மகவு. கல்வியறிவோ, நாகரிகச் சுடரோ, பதியாத மிகப் பின்தங்கிய ஒரு சமுதாயத்திலேயே இவர் பிறந்தார்.

இப்பேற்பட்ட சமுதாயத்தில் பிறந்த க.பே.முத்தையா அவர்களுக்கு மூத்த சகோதரர்கள், சகோதரிகளாக நான்கு பேர் இருக்கின்றனர். இதில் மூத்த சகோதரன் பெயர் முத்துப்பிள்ளை, இவருக்கு அடுத்ததாக அருமையாகப் பெற்றெடுத்த மயிலாத்தை எனும் ஒரேயொரு சகோதரியும் அதன் பின் ஆறுமுகம், கணபதிப்பிள்ளை என்று முறையே இரு சகோதரர்களும் இருக்கின்றார்கள். மொத்தம் ஏழு பேரைக் கொண்டதாகக் கந்தையாவின் குடும்பம் காணப்பட்டது. நாளாந்த வாழ்க்கையில் காணப்படும் வறுமை க.பே. முத்தையாவின் குடும்பத்தில் இருந்து வந்தது. ஆனால் அமரர்.கந்தையா அவர்கள் வறுமையைக் கண்டு பயந்தவராகத் தனது பிள்ளைகளுக்கான கல்வியைப் புகட்டாமல் விடவில்லை.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

என்ற வாக்குக்கு ஏற்ப தந்தை தனது பிள்ளைக்கு எதனைச் செய்ய வேண்டுமோ அவை அனைத்தையும் கந்தையா தனது பிள்ளையான முத்தையாவுக்கும் செய்தார். முயற்சியும் முன்னவன் மேலுள்ள பக்தியும் நிறைந்தவராக,

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு"

என்ற திருமூலர் வாக்கைத் தனதாக்கிக் கொண்டு இளையதம்பி என்ற பெயரோடு உடுத்துறைக் கிராமத்துப் பாடசாலை ஒன்றில் தனது ஆரம்பக்

கல்வியைப் பயின்றார். பின்னர் தெல்லிப்பளையிலுள்ள சாதனாப் பாடசாலையிலும் கல்வி கற்றார். அன்று ஆரம்பக் கல்வியைக் கற்ற மாணவர்களில் தமிழை மிக வாஞ்சையுடன் கற்றவராக இளையதம்பி என்னும் பிள்ளை காணப்பட்டான். சிரேஷ்ட தராதரப் பத்திரம் பெற்றவராக 1934ம் ஆண்டில் சாவகச்சேரிச் சின்னத்தம்பி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் முத்தையா எனும் பெயரோடு சேரும் போது தமிழறிவில் அன்றிருந்த மாணவர்கள் யாவரிலும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார். வகுப்பிலும் திறமையுள்ள மாணவர்களில் ஒருவராகவும் இவர் தன்னை இனங்காட்டிக் கொண்டார்.

அக்காலத்திலேயே பாக்கள் இயற்றும் பாண்டித்தியமுடையவராகத் திகழ்ந்தார். அவர் தமிழைப் பிழையறக் கற்றிருந்தமையால் கவிதையாப்பும் அவருக்கு நன்கு தெரிந்திருந்தது. முன்னதனாற் கிடைத்த சொற்கூட்டத்தைப் பின்னதனாற் கிடைத்த யாப்பமைதியோடு பொருத்திக் கவிதைகள் யாப்பதிலே அவர் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் தெல்லிப்பளையில் கற்ற காலங்களில் கிறிஸ்தவர்களையும், அவரது வேதத்தையும், அவர்கள் ஆசாரங்களையும் ஏளனம் பண்ணுமளவுக்கு வைராக்கியமுள்ள இந்துவாயிருந்தார். இதனால் தான் அவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின்னர் "திருச்சிலுவை அந்தாதி" எனும் அனுபந்தம் ஒன்றில் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஆதவ கோடி அகந்தைகள் அக்கிராமம் ஆற்றிறைந்த
பாதகன் யானென நீதா னறிவை பலரறிவர்
நோதக நைந்தேன் நொறுங்கு மனத்தினை நோவகற்றும்
தீதக லுந்தன் திருவடி சேர்ந்தேன் திருவருளே"

இவ்வாறு தம்மைப் பற்றிக் கூறி, அதன் பின் தான் எத்தனை வருடங்கள் கிறிஸ்துவை அறியாது இருந்தேன் என்பதற்குப் பின்வருமாறு கூறுகின்றார்.

" அருளைப் பழித்தேன் அறுமூன் றுடனிரண்டாண்டு
மகுளிற் தரித்தேன் மதியிலர் யாத்த வழாங்கவிகள்

பொருளிற் கெனப்பயின் றன்பின் பெருக்கையும்
(போக்கடித்தேன்)

தெருளைத் தருவாய்? தெவிட்டா நறுஞ்சுவைத்
(தீங்கனியே)

இக்கவிதை வரிகள் நடையினைப் பார்க்கின்ற போது பாரதியாரின் யோக சித்தி வரங்கள் கேட்டல் பகுதியின் கவிதைகளைப் போன்று விறுவிறுப்பான தன்மைகளைக் கொண்டதாக இருக்கின்றது. இவருடைய மனமாற்றத்திற்கும், மத மாற்றத்திற்கும் அமைவிடமாக இருந்தது, சாவகச்சேரி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையே எனலாம். இங்கு பயிற்சி பெற்ற காலத்தில் அவரது உடன் மாணவரொருவரது செல்வாக்கும், அவரது அண்ணனது கிறிஸ்தவ பக்தி வைராக்கியமும் தான் அவரை ஆண்டவரிடத்தில் வழிநடத்தியது.

மேலும் எமது தென்னிந்தியத் திருச்சபையின் மறைந்த பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி.எஸ்.குலேந்திரன் அவர்கள் அமரர்.க.பே.முத்தையாவைப் பற்றிய தனது நினைவுகூரலில்,

"As one who know Mr.Muthiah, when he was a student and who can claim, to have had something to do with his coming into the christian fold, I may say, that even then we know we were dealing with someone who was out of the ordinary"

பேராயர் அவர்களும் இவரை மாணவப் பிராயத்திலிருந்து அறிந்திருந்தபடியினால் க.பே.முத்தையாவைக் கிறிஸ்துவிடம் கொண்டு வர அதிக பிரயாசமும், முயற்சியும் எடுத்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

பவுலடியார் கொரிந்து சபைக்கு எழுதும் பிரகாரம் "நான் நட்டேன், அப்பெல்லோ நீர் பாய்ச்சினான், தேவனே விளையச் செய்தார்" எனக் கூறப்பட்டது போல க.பே.முத்தையா அவர்கள் 1936இல் இயேசு இரட்சகரின் மீட்பில் விசுவாசம் கொண்டவராகப் பேதுரு எனும் மறுநாமத்துடன்

ஞானதீட்சை பெற்றார். அம்மீட்பின் செய்தியை ஏற்றதோடு மட்டும் நில்லாத அவர் அதைப் பரப்புவதில் இன்பமும் கண்டார். க. பே. முத்தையாவின் மனமாற்றத்திற்குக் காரணமாக அமைந்த காரணிகள் அவருடைய ஆரம்பகாலப் பாடசாலைக் கல்வி முறையும், அதனால் அவர் பின் நாட்களில் சாவகச்சேரி ஆசிரியக் கலாசாலையிலும், நல்லூர்க் கிறிஸ்தவ பயிற்சிக் கல்லூரியிலும் கிடைத்த திரு. ஜே. சி. அமரசிங்கம் ஆசிரியர் அவர்களது வழிகாட்டல்களுமே. திரு.ஜே.சி. அமரசிங்கம் அவர்கள் தெல்லிப்பளையிலும் சாவகச்சேரியிலும் பின்னர், நல்லூரிலும் தனது ஆசிரிய சேவையினைச் செய்து வந்ததோடு நல்ல வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். இவரிடமிருந்தும் இப்பாடசாலைகளில் இருந்தும் தனது அறிவுக்குரிய அனைத்தையும் க.பே.முத்தையா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

"ஏற்றமுன்னா ஏற்றம் – இதிலேயிருக்குது முன்னேற்றம்
அறிவுக்குப் பொருத்தமுள்ள அத்தனையும் தெரிஞ்சுக்கணும்
அனுபவப் பள்ளியிலே பாடம் கத்துக்கணும் – நல்ல
பாடம் கத்துக்கணும்"

எனப் பட்டுக்கோட்டையார் பாடுகின்றார். இதனால் தான் என்னவோ அவர் தான் பாடசாலை நாட்களில் கற்றவற்றை மறக்காது தனது பின் சந்ததியாரும் அதனைப் பின் தொடர வேண்டும் என்ற நோக்கில் மாணவச் செல்வங்களை அற வழியிலும் ஒழுக்க நெறியிலும் மிளிரச் செய்யும் நோக்கில் காலத்திற்குக் காலம் உதய தாரகையில் பல்வேறுபட்ட கட்டுரைகளை எழுதினார்.

"விடிவெள்ளி" அவர்களின் சம காலத்துடன் இணைந்தவரும் திரு.ஜே.சி. அமரசிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய பின் நாட்களில் கல்வி கற்றவருமான கிறேஸ் செல்வரட்ணம் தாமோதரம்பிள்ளை அவர்களிடம் அன்றைய நாட்களின் பாடசாலைக் கல்வியையும், விசேஷமாக அதிபர் சேவையாற்றிய திரு.ஜே. சி. அமரசிங்கத்தினுடைய வழிகாட்டல் எவ்வாறு இருந்தது என்றும் வினவிய போது......? அன்றைய நாட்களில் பயிற்சிக் கலாசாலைக்குச் சமுகமளிக்கும் ஆண்கள் வெள்ளை நிறச் சேட், வேட்டி அணிந்திருக்க வேண்டும். சேட்டின் பொத்தான்கள்

அனைத்தும் சரியாகப் போடப்பட்டிருக்க வேண்டும். எவரையும் யாரும் பெயர் சொல்லி அழைக்க முடியாது, Miss அல்லது Mister எனக் கூறிப் பெயர் சொல்லி அழைக்க வேண்டும். பயிற்சிக் கலாசாலைக்குச் செல்லும் பெண்கள் கட்டாயமாகச் சேலை கட்டிப் பின்னுக்குக் கொய்யகம் செருகித் தலையில் கொண்டை போட்டிருத்தல் வேண்டும். வகுப்புக்களுடன் சேர்ந்ததாகவே அதிபருடைய மனை இருக்கும். அதிபர் மாலை நேரங்களில் முன் விறாந்தையில் உலாத்துவார். கடுகு சிறிதாயினும் காரம் பெரிது என்பது போல் திரு. ஜே. சி. அமரசிங்கம் அவர்களின் தோற்றம் சிறிதாயிருந்தாலும் யாவருக்கும் சிம்ம சொப்பனமாக இருக்கத்தக்க ஆளுமை கொண்டவராகக் காணப்பட்டார். காலையில் அனைவரும் கிறிஸ்தவ ஆராதனையில் கலந்து கொள்ள வேண்டும். பொதுவான ஒரே ஒரு வழிபாடாக ஒன்றே தான். ஞாயிற்றுக்கிழமைகளில் எந்த மாணவர்களாயினும் வீடு செல்ல முடியாது. அனைவரும் காலை ஆராதனையில் கலந்து கொள்ள வேண்டும். வழிபாடுகளைக் கனம் வண.சோமசுந்தரம் போதகர் அவர்களும் அல்லது திரு.ஜே.சி.அமரசிங்கம் அவர்களும் நடாத்திக் கொள்வார்கள். பின் நாட்களில் கனம் சோமசுந்தரப் போதகரின் இரண்டு ஆண் மக்களும் திரு.ஜே.சி.அமரசிங்கம் அவர்களின் இரண்டு பெண் பிள்ளைகளையும் திருமணம் செய்து கொண்டார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இங்கு நடாத்தப்பட்ட வழிபாட்டு முறைகளும், ஆராதனைகளும் அனைத்து இந்து சமயப் பிள்ளைகளையும் நாளடைவில் கிறிஸ்துவைஅறிந்து அவரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சொந்த வாழ்க்கையில் அவரைப் பற்றிப் பிடிப்பதற்கு வழி செய்தது. அத்துடன் அதிபர் திரு.ஜே. சி. அமரசிங்கம் அவர்களின் சாந்தம் தவழும் வதனமும், புன்னகை மிளிரும் இதழ்களும், உலகத்தை ஊடுருவிப் பார்க்கும் மூக்குக்கண்ணாடி அணிந்த கண்களும், கல்விக்கடலில் வரும் மாணவன் எனும் கப்பலுக்கு வழி காட்டியாக அமைந்த கலங்கரை விளக்காய்த் திகழ்ந்தார். காந்தியக் கொள்கையை அவரிடம் கண்டார்கள் மாணவக்கனிகள். காலத்தைப் பொன் போலவும், கடமையைக் கண்ணாகவும் கருதுபவர் கல்விக்கு இரண்டாம் இடம் கொடுக்கும் இவர், order and decipline க்கே முதலிடம் கொடுக்கும் இவரது கடுமையை இவரிடம் கல்வி பயின்றவரே அறிவார். இவருடைய கணீர் என்ற பேச்சுக்கூட பலரையும் இவரிடையில் இழுத்துக் கொண்டது. மாணவர் இருக்கும் போதும்,

நடக்கும் போதும் நிலை சரியாக இருக்க வேண்டும் எனக் கூறுவார். அப்போது தான் வாழ்க்கை நிலையும் சரியாக இருக்கும் என எண்ணம் கொண்டவர் அவர்.

அடுத்து, விடிவெள்ளியவர்களின் கல்வித்தேடல் மிகுந்த அன்றைய நாட்களில் அவர் அறிந்து கொண்ட ஒரு பெண் ஆங்கிலேய மிஷனரி "கட்சின்" அம்மையாராவார். இவர் ஓர் ஆங்கிலேயராக இருந்த போதிலும் எமது தாய் மொழியாகிய தமிழிலேயே தனது பாடங்களை நடத்துவார். அம்மையார் அவர்கள் பலருக்கும் "பாலர் கல்வி முறைகள்" என்ற பாடத்தைக் கற்பித்தார்கள். இப்பாட போதனா முறைகள், விடிவெள்ளியவர்களுக்கு மிகவும் உதவிற்று. ஏனெனில் அதிகம் க.பே.முத்தையா அவர்கள் ஆரம்பப் பாடசாலைகளிலேயே தலைமை ஆசிரியராக கடமை புரிந்துள்ளார். தான் கற்றவற்றை ஒரு செயல் இடமாக காட்டுவதற்கு அது அடிகோலியது. "சிறு நெருப்பும் பெருங்காட்டையும் அழித்துச் சாம்பலாக்கும்" என்ற பழமொழிக்கு ஏற்ப எச்சிறு செயல்களையும் எச்சிறு உபதேசங்களையும் அலட்சியப்படுத்தாது கவனம் செலுத்தினர். இவற்றையே பின்நாட்களில் அவரும் கைக் கொண்டார். மற்றவர்களும் கைக்கொள்ளும் படி தூண்டினார்.

"மன்னும் தமிழ்மா மழைபொழிந்து – பன்னூறு
பாவலராம் பச்சைப் பயிர் வளர்த்த பைந்தமிழின்
காவலனார் வாழ்வார் கனிந்து"

என்றவாறு தனது வாழ்க்கையை நடாத்திச் சென்றார் அமரர் க.பே. முத்தையா அவர்கள்.

பெரும்பாலான வழிபாடுகளில் அவர் பின்வரும் பாடலை விருப்பத்துடன் பாடுவார். இப்பாடல் ஏச்.ஏ.கிருஸ்ணபிள்ளை அவர்களின் இரட்சண்ய மனோகரப் பாடல் ஆகும்.

" வா எந்தன் சுவாமி
வாரும் இந்த நேரத்திலே
தந்திடும் சுந்தரக் கையால்
வந்திடும் நன்மை எல்லாம்"

க.பே.முத்தையா அவர்கள் தனது காலத்துக்குள் அறிய வேண்டியவற்றை அறிந்து, கற்க வேண்டியவற்றைக் கற்று முடித்தவராக, வள்ளுவர் பெருந்தகை கூறும் தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் நடப்பது சிறந்த கடமையாகும் என்பதை அறிந்து கொண்டவராக, இல்வாழ்க்கையை விரும்பியவராக இவர் 1943ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25ம் நாளில், மேரி ஜெயமணி எனும் பெண்ணை விவாகம் செய்தார். ஜெயமணியும் சங்ககால இலக்கியமான ஐங்குறு நூற்றில் ஒரு இல்லாள் எவ்வாறு தனது இல்லானையும், தனது மனைவியையும் காக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றதோ அவ்வண்ணமே வாழ்ந்தார். கணவன் வீடு வறுமையுற்றதாயினும் தன் பிறந்த வீட்டை எண்ணாது பெருமையோடு வாழ வேண்டும். இதனை ஐங்குறு நூற்றுப் பாடல் பின்வருமாறு விபரிக்கின்றது.

"அன்னாய் வழிவேன் உன்னை நம் படைப்பை
தேன்மயங்கு பாலிலும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற கீழ
மானுண் டெஞ்சிய கவீழி நீரே"

ஜெயமணியும் தன்னை கொண்டவனின் குறிப்பறிந்து இல்லறத்தைச் செம்மையுற நடத்தினார். க.பே.முத்தையாவும் ஜெயமணியும் "பெத்தானிய வீட்டை" போன்று தனது வீட்டையும் செப வீடாக மாற்றினார். இவ்வீடு எப்போதும் அனைவருக்கும் திறந்திருக்கும். விருந்தோம்புதலையும், சுற்றம் தழுவுதலையும் வறியோர் துயர் துடைப்பதையும் தம் தலையாயக்கடமையாகக் கொண்ட அமரர் க.பே.முத்தையா அவர்கள் பிறர் துயர் துடைத்தலையே இவ்வாழ்க்கையிலும் பெரிதாக எண்ணினார்.

"அறம்தலை பிரியா தொழுகலும், சிறந்த
கேளீர் கேடுபல ஊன்றலும், நாளும்
வருந்தார் உள்ளமொடு இருந்தோக் கில்"

இவர் வீடு ஆண்டவனடியார் தங்கும் வீடாய் இருந்தது மாத்திரமன்றி, இவரும் நன்மை செய்கின்றவராக சுற்றித்திரிந்தார். அவரது மரணத்தின் போதும் ஆண்டவன் பணியும், அயலார் பணியும் அவரில் வெளிப்பட்டதைக் காணலாம். இவரிடம் இருந்த தமிழறிவும், கிறிஸ்தவ பக்தியும், விசுவாசமும் பல தோத்திரப் பாடல்களையும், பாமாலைகளையும் பாட வழிவகுத்தது. விடிவெள்ளியவர்கள் எமது உள்நாட்டில் மாத்திரம் அன்று எமது அயல் நாடான இந்தியாவில் கூட தனது ஆக்கத்திறன்களை வெளிக்காட்டியுள்ளார். இவருடைய விருந்தோம்பலின் தன்மை, இன்சொல் கூறல் எவ்வாறானது என்று "இந்தியாவில்" இருந்து இங்கு நற்செய்தி பணிக்கென வந்திருந்த திரு. பால்கடம்பவனம் அவர்கள்" விடிவெள்ளியவர்களின் மறைவையொட்டி "மேதை முத்தையா மேலேறினார்" என்ற தலைப்பின் கீழ் ஒரு இரங்கலுரையினை உதயதாரகையில் பிரசுரித்திருந்தார்.

நடுக்காட்டில் குண்டுமணிகளைப் பொறுக்குவது போல் நல்ல கிறிஸ்தவ விசுவாசிகளது நட்பும், ஒத்துழைப்பும், ஐக்கியமும் எனக்கு கிடைத்தது என் பாக்கியம், எனக்கூறி இவ்வாறான இலங்கையில் நான் கண்டெடுத்த குண்டுமணிகளில் யாழ்ப்பாண வித்துவான் முத்தையா அவர்களும் ஒருவர். அவர்கள் இல்லத்தில் ஒரு வாரம் தங்கியிருந்தேன். அந்தக் காலத்தில் அமரர் முத்தையா அவர்களும் அவர் துணைவியாரும் எனக்கு பாராட்டின அன்பால் என் உள்ளத்தைக் கவர்ந்துள்ளார்கள். அவர் ஒரு சிறந்த தமிழ் மாணவன் கவிகள் கட்டும் வரமுடையவர். அவரிடத்தில் பேசிக் கொண்டிருந்தாலே அவர் உதடுகளில் அறிவைக் காணலாம். நான் அவ்வூருக்கு அந்நியனானபடியால் என்னைத் தனியே அனுப்பாமல் என் கூடவே வந்து பல விதத்தில் எனக்கு உதவி புரிவார். என்னைக் காணும் பொழுதும், என்னைப் பிரியும் தருணங்களிலும் என்னைக் கட்டி அணைத்துக் கொள்வார். எங்களுக்குள் பரஸ்பர நட்பை உண்டாக்கினது தெய்வ பக்தியும், தமிழ்மொழியின் ஆர்வமே என நினைவு கூருகின்றார்.

இவ்வாறு விடிவெள்ளியவர்கள் தன்னை முழுவதும் இறைவன்பால் ஒப்படைத்தவராக இல்லறத்தை நல்லறமாக தன்னைப் பிறருக்கு ஒப்படைத்து வாழ்ந்தார். இதனைத் தாயுமானவரின் பராபரர் கண்ணியில் அழகாக காண்கின்றோம்.

"தன்னைத் தந்து என்னைத் தடுத்து ஆண்டநின் கருணைக்கு
என்னைக் கொண்டு என்ன பலன் எந்தாய் பராபரமே"

அதாவது இறைவன் தன்னைக் கொடுத்து என்னை தனக்குரியவராக ஆட்கொண்டு விட்டார் என நினைத்தவராக வாழ்ந்தார். குடும்ப வாழ்வு குழந்தையின்றி முழுமை பெறுவதில்லை என்பது சான்றோர் கொள்கையாக இருந்தது. மக்கட்பேற்றின் இனிமையை வள்ளுவத்தின் வழிகண்டவராக இரண்டு ஆண் மகவுகளையும், மூன்று பெண்மகவுகளையும் பெற்று மக்கட் பேற்றின் இனிமையைக் கண்டார். அவர்களில் மூத்தவராக ஜெபராணியும், அடுத்ததாக ஜெயராசா எனும் ஆண் மகவும், ஜெபதேவி, ஜெபமலர், ஜெபஆனந்தன் என்னும் முறையே நாமங்கள் ஆகும். இவரது மக்கள் யாவரும் செப ஆரம்பத்துடன் நாமமிடப்பட்டுச் செபத்தில் வளர்க்கப்பட்டனர்.

விடிவெள்ளியவர்களின் மனை எப்போதும் பலரும் கூடி இருக்கும் இடமாக இருந்தது. பல ஆய்வாளர்கள், பாவலர்கள், சமயகுருக்கள், அரசியல் பிரமுகர்கள், நற்செய்தி தொண்டர்கள் என்று சமூகத்தில் இருக்கும் அத்தனை பிரிவு மக்களும் கூடி இருப்பர். அங்கே சில நேரம் இரவு பகலாக வாதப் பிரதிவாதங்களும் நடக்கும் சொற்பொழிவு ஒத்திகைகள், கவியரங்கம் என்பனவும் நடக்கும். இவை எல்லாவற்றையும் அவரின் மக்கள் கற்று உள்வாங்கி செப்பமிடப்பட்டவர்களாக இருந்தார்கள்.

"பிசிராந்தையார் என்பர் கூறும் கருத்து என்னவெனில் ஒருவன் நரையில்லா வாழ்வை வாழ வேண்டுமாயின், முதலில் வாய்த்த மனைவி மாண்புடையவளாக விளங்க வேண்டும். அடுத்து மக்கள் அறிவு நிரம்பியவர்களாக இருக்க வேண்டும். ஏவல் இளைஞர் குறிப்பறிந்து செயற்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அன்று, அவிந்து அடங்கிய கொள்கைச்சான்றோர் நாட்டில் வாழ வேண்டும். இத்தகு சூழ்நிலை

இருந்தால், மனிதன் நரையிலா நல்வாழ்வு வாழமுடியும் எனக் கூறுகின்றார். தனது வாழ்க்கையில் இவற்றை எல்லாம் ஒருங்கே பெற்றவராகத் தான் எண்ணவோ குறுகிய காலத்துக்குள் எம்மை விட்டு மறைந்து விட்டார் போலும்.

பிசிராந்தையாருடைய கருத்திலும் சற்று அப்பாற்பட்ட கருத்தொன்றை Bishop Don Halder Camara பின்வருமாறு கூறுகின்றார். அது சற்று ஆழமான கருத்தாகவும் இருக்கின்றது. அது என்னவெனில் "எவ்வித மாயத் தோற்றத்தையும் உடையவர்களாக நாம் இருக்கக்கூடாது. சூதுவாதற்றவர்களாய் நாமிருக்க வேண்டும். நாம் கடவுளுடைய சத்தத்தைக் கேட்போமேயாகில் எம்முடைய தெரிவுகளை நாமே மேற்கொள்வோம். எங்களிலிருந்து வெளியே வந்தவர்களாய், ஒரு நல்ல உலகுக்காக நாம் வன்முறையற்ற வகையில் போராட வேண்டும். அதனை இலகுவாகக் கண்டடைய நாம் எதிர்பார்க்கக் கூடாது. றோசாவின் மேல் நாம் நடக்கக்கூடாது. எங்களுக்குச் செவிமடுக்கவும், எங்களைப் பாராட்டவும் மக்கள் கூட்டமாகக் குழுமமாட்டார்கள். மேலும் தெய்வீகப் பாதுகாப்பைப் பற்றி நாம் எப்போதுமே அறியமாட்டோம். நீதிக்கும் சமாதானத்துக்குமான பயணிகளாக நாமிருக்க வேண்டுமானால் வனாந்தரத்தையும் நாம் எதிர்பார்க்க வேண்டும்".

க.பே.முத்தையா ஒரு நல்ல உலகுக்காக வன்முறையற்ற வகையில் போராட வேண்டும் என்பதை அறிந்து தன்னுடைய தெரிவுகளைத் தானே மேற்கொண்டார். ஒரு மனிதனின் பெருந்தன்மை எங்கு தங்கியிருக்கின்றது எனில், அவருடைய ஆத்துமாவின் பெருந்தன்மையில் தங்கியுள்ளது. ஆத்துமாவின் பெருந்தன்மை தன்னை வெளிப்படுத்தும் ஒன்றாகவுள்ளது என்பதை எமது முன்னாள் மறைந்த பேராயர் கலாநிதி எஸ்.குலேந்திரன் அவர்கள் க.பே.முத்தையாவை பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

Greatness does not depond upon achievements, but on attitudes and "relations which express themselves" un expresd attitudes are not attitudes at all. the greatness of a man

ultimately depends on the greatness of his soul (which the Romans called Magna, anima) and greatness of soul always expresses it self in fast, it is largely the quality of not hearing itself. it does not express itself in set channels nor issue in great achievements, but people know that there is a great soul expressing itself. and no one can deny this claim to the late.K.P.Muthash.

A great soul any spend itself for others, but it does not because it wants the good opinion of others but because it is to do so, according to its sense of values.

இங்கே பேராயர் அவர்கள் குறிக்கும் Magna anima என்ற சொல்லானது பெரிய மகாத்மாக்களைப் பாவிப்பதற்குப் பயன்படுத்தும் உரோமச் சொல்லாகும். ஒரு பெரிய ஆத்துமா உள்ள ஒருவர் மற்றவர்களுக்காகத் தனது நேரத்தையும், காலத்தையும் செலவழிக்க முடியும். ஆனால் அது மற்றவர்களின் நல்லெண்ணத்தைப் பெறுவது என்பதல்ல. மாறாக அது அவருக்குச் சரியென்று பட்டதினால் அவர் அதைச் செய்தார் எனப் பேராயர் அவர்கள் தனது The word men and matters என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

"வாய் பேசுவதை விட வாழ்க்கை பேச வேண்டும் என்பது அழகிய கருத்துமிக்க கூற்று. இக்கூற்று எவ்வளவு உண்மை என்பதை நிரூபிப்பதைப் போன்று க.பே.முத்தையாவினுடைய வாயும் பேசியது, வாழ்க்கையும் பேசியது எனலாம். நமதண்டையில் கிறிஸ்தவத்தினால் வளர்ந்தவர்கள் பலர், கிறிஸ்தவத்தை வளர்த்தோர் மிகச் சிலரே. அந்த மிகச் சிலரில் க.பே.முத்தையாவும் ஒருவர் என நினைவுகூர்ந்தார் வணக்கத்துக்குரிய அறிவர் எஸ். ஜெபநேசன். அவர் பின்வருமாறு விடிவெள்ளியின் சுதேச அபிமானத்தை நினைவு கூர்ந்து குறிப்பிட்டார். வழிபாடுகளுக்குச் சென்றால் முன் ஆசனத்தில் இருந்து கொண்டு முழங்காற் படியிட்டு செபிக்கும் தன்மையைக் கொண்டவர். செபிக்கும் போது மூக்கில் விரலை வைத்து செபிக்கும் பழக்கத்தைக் கொண்டவர். இதிலிருந்து

இவரின் சுதேச அபிமானத்தை அறிந்து கொள்ளலாம். ஆங்கிலேயரது பாணியிலே தான் ஆசனங்களிலிருந்து செபிக்கும் முறை காணப்பட்டது. ஆனால் அது இந்நாள் வரையும் எமது திருச்சபையில் தொடர்கின்றது.

க.பே.முத்தையா அவர்கள் தனது குடும்ப வறுமையின் நிமித்தம் தமது பொருட்கள் பலவற்றையும் நல்கி தனது பிள்ளைகளின் கல்வியைப் பேணிப் பாதுகாத்து வந்தார். இதனைப் பின்வரும் பாடல் வரிகள் அழகாக விளக்குகின்றது.

"சான்றோர் ஆக்குதல் தந்தையர்க்குக் கடன்
உற்றுளி உதவியும் உறுபொருட் கொடுத்தும்
பிற்றை நிலை முனையாது கற்றல் நன்றே"

க.பே. முத்தையா அவர்களது குடும்பத்தில் இருந்த வறுமை காரணமாகத் தன்னிடமிருந்த ஒரு தங்கப் பதக்கத்தைக் கூட விற்றுத் தனது பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டினார். க.பே.முத்தையா அவர்கள் செய்த சமூகத் தொண்டிற்குப் பரிசாக, ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் ஒரு தங்கப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார். இவ்விரு பதக்கங்களும் எலிசபெத்து மகாராணி அவர்களினால் இவரது சமூகத் தொண்டின் மேன்மையைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டு வழங்கப்பட்டது. க.பே.முத்தையா அவர்கள் இறக்கும் வரையும் இவ்வெள்ளிப் பதக்கத்தைத் தன்னுடன் வைத்துக் கொண்டார்.

"உடல் வாடினாலும் பசி மீறினாலும்
வழி மாறிடாமலே வாழ்ந்திடுவோம்"

என்று பட்டுக்கோட்டையார் பாடல் கூறுகின்றது. இதற்கொழுகவே அமரர்.க.பே.முத்தையா அவர்களும் தனது வழி மாறிடாமல், கிறிஸ்து இயேசுவைத் தரித்தவராக, நெறி தவறாமல் தனது இல்வாழ்க்கை நடத்தினார்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்ற ஔவையாரது வாக்குக்கேற்ப க.பே.முத்தையா அவர்கள் கற்றது மட்டுமல்ல, கற்பித்தலையும் செவ்வனே செய்தார். இவ்வாறு க.பே.முத்தையா அவர்கள் எவ்வளவு உற்சாகமாகக் கற்றாரோ, அதே போல தனது பிள்ளைகளை மட்டுமன்றி தனது மாணவச் செல்வங்களையும் நல்வழிப் படுத்தினார்.

"தண்மை யன்பு தயை பொறுமை
தாய்மை உணர்ச்சி அறிவமைவு
உண்மை யூக்கம் திறமைகளால்
உயரும் தூய ஆசிரிய
வண்மை பணியில் நாமோங்கி
வளரப் புவியின் வாழ்வினிலே
பண்பின் அறிவுக் கனிபழுக்கப்
பரனே கருணை மழை பொழிவாய்."

இவ்வாறு "விடிவெள்ளி கவிதைகள்" என்ற நூலில் க.பே.முத்தையா அவர்களைப் பற்றிக் கடவுள் வாழ்த்துப் பகுதியில் பாடப்பட்டுள்ளது.

குருவைக் கடவுளாக மதிப்பது இந்திய மரபு, மாதா, பிதா, குரு, தெய்வம், எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பவை தமிழில் வழங்கும் முதுமொழிகள். சைவ மாணவருக்குச் சிவனே குருவாக வருகின்றார் என்பர். வைணவ மாணவருக்குத் திருமாலே குருவாகக் தோன்றுகிறார் என்பர். அனைத்து சமயச்சடங்குகளிலும், மந்திரங்களிலும் குரு பூஜையே மிக்கப் பயன் உள்ளது என்பது பொதுவான நம்பிக்கை ஆகும். இந்த இந்திய மரபை நன்கு உணர்ந்த வீரமா முனிவர் தமது தேம்பாவணியில் "குருத்துணை இல் ஆயினான், குருடன் ஆயினான்" என்கிறார்.

இன்றைய யாழ்ப்பாணத்து மக்கள் அதிக புத்திஜீவிகளாக இருப்பதற்குக் காரணம் அமெரிக்க மிஷனரிமாரின் கல்வி புகட்டும் பணியாகும். மிஷனரிமாரிடம் இருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளில் இன்று வரை சுதேசிகளிடம் நிலைத்திருப்பது கல்வியே ஆகும். குடாநாட்டில் குடத்தனை முதல் மேற்கே நெடுந்தீவு வரை அமெரிக்கன் மிஷனரிமாரின் பள்ளிகள் செயற்பட்டு வந்தன. மிஷனரிமார் முதலில் சுதேசிகளின் மொழியினைக் கற்று அதன் தொன்மையான வரலாறுகளைக் கற்றுச் சுவைத்து அதற்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து அதன் தொன்மையைப் பாதுகாத்தனர். மேலைத் தேயவர்கள் இங்கு வந்து கூட தமது தாய் மொழியைத் திணிக்க முற்படவில்லை. மாறாக சுதேச மொழியினைப் பற்றி, சுதேச மொழியான தமிழ் மொழியிலேயே கற்பித்தலையும் தொடர்ந்தார்கள். யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய பல மிஷனரிமார்கள் தமிழிலும், இந்து சமயத்திலும் பாண்டித்தியம் பெற்றவர்களாக விளங்கினார்கள். அவர்களுள் டானியல் பூவர், எஸ். ஆர்.ஹய்சிங்டன், சாமுவேல் ஹெஸன்ட் போன்றவர்களைக் கூறிக் கொள்ளலாம். இவ்வாறான மிஷனரிமார்கள் சுதேச நிலையை அறிந்து கொண்டவராக க.பே.முத்தையா அவர்கள் தாய்மொழியான தமிழைக் கற்பிக்கும் ஆசிரியராக மிஷனரிமாரின் பிற்பட்ட பணியினைத் தனது பணி என அறிந்து சுதேச நிலைப்படுத்த முற்பட்டார்.

"ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே – நீ
ஏன் படித்தோம் என்பதையும் மறந்து விடாதே"

என்ற பட்டுக்கோட்டையாரின் பாடல் வரியினைப் போன்று 1936ம் ஆண்டு தலைமை ஆசிரியராக வேம்பொடு கேணியிலுள்ள அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கடமை புரிந்தார். இப்பாடசாலையில் கல்வி கற்பிக்கும் காலம் தான் க.பே.முத்தையா அவர்களின் ஆசிரியத் தொழிலின் ஆரம்ப கால அனுபவமாக இருந்தது. 1964ம் ஆண்டு பெற்றோர் ஆசிரிய சங்கத் தலைவராக இருந்த திரு.அ.இளையதம்பி என்பவர் தலைமை ஆசிரியர்களின் பணியினைப் பற்றிக் கூறிய போது அவர் கூறியதாவது,

"ஆசிரியர் ஒரு நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்கள்
தலைமை ஆசிரியர்களே குடும்பத் தலைவர்களைப் போன்றவர்கள்

எனக் குறிப்பிட்டுள்ளார். வேம்பொடு கேணியில் தனது பணியின் காலம் முடிவடைந்த பின்னர் 1937ம் ஆண்டு உடுத்துறை எனும் தனது சொந்தக் கிராமத்தில் பணிபுரியும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. இந்த ஆசிரிய இடமாற்றத்தை இவரே விரும்பிக் கேட்டதாகப் பின்னர் பலரும் அறியக் கூடியதாக இருந்தது. விடிவெள்ளியவர்களின் ஆசிரியப் பணியில் தொடர்ந்து அதிக வருடங்கள் கற்பித்த இடமும் உடுத்துறையாகும். இவர் கற்பித்தலுடன் மட்டும் நின்று விடவில்லை. திரு.க.பே.முத்தையா அவர்கள் தமிழ் ஆசிரியர் மத்தியில் ஒரு விடிவெள்ளியாகப் பிரகாசித்தார். அவருக்குப் பெருந்தொகையான இந்து நண்பர்களும் கத்தோலிக்க நண்பர்களும் இஸ்லாமிய நண்பர்களும் இருந்தார்கள். இவை மட்டுமல்லாமல் தமிழகத்திலும் பல அறிஞர்கள், பெரியார்கள் மத்தியிலும் இவருக்குத் தொடர்பு இருந்தது. ஆனால் அவருடைய தோற்றம் எப்போதும் ஒரு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்களின் தோற்றமாகவேயிருந்தது. சாதாரண வைபவங்களுக்கு அவர் வேட்டியும், அங்க வஸ்திரமும் அணிந்து கொள்வார். விசேட வைபவங்களுக்கு அவற்றுடன் ஒரு சால்வையும் அணிந்து கொள்வார். எப்போதும் நகைச்சுவை உணர்வுடன் பேசுவார். மத சம்பந்தமான கூட்டங்களில் மட்டுமன்றி இலக்கியம் சம்பந்தமான கூட்டங்களிலும் சமூக சீர்திருத்தக் கூட்டங்களிலும் இவர் உற்சாகத்துடன் கலந்து கொண்டார். இதனாலேயே இவருடைய நண்பர்களும், அபிமானிகளும், மாணவர்களும், உடன் ஆசிரியர்களும் கிறிஸ்துவை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

ஒவ்வொரு தனி மனிதனையும் இவர் நேசித்தார். தனிக் குடும்பங்களின் நலனிலே அக்கறை காட்டி, சமூகத்தின் ஊழியனாக மாறும் தன்மை இவருக்கு இயற்கையாக இருந்தது. நெய்தல் பிரதேசமான இவ்உடுத்துறையிலே எமது உடுவும் இயற்கைக் காட்சிகளிலே தன்னை இழந்து அதனோடு ஐக்கியமாகிவிடும். தனித்துவ நிலைக்கும் விடிவெள்ளியின் தொண்டுக் கவிதைக்கும் வெகுதூரம். அவர் தம்மைச் சூழ்ந்துள்ள மக்களோடும் அவர்களின் இன்ப துன்பங்களிலும் பங்கு

கொண்டார். மக்களின் வாழ்வைச் சீர்திருத்துவதில் ஒரு குருவாகவும், ஆசிரியனாகவும், மக்களின் பண்பாடுகளை உயர்த்துவதில் தன்னையே ஒரு வழிகாட்டியாகக் காட்டித் தம்மை இழந்து விட்டார். எனவே தான் திரு. எஸ். தேவநேசன் என்னும் ஒரு அன்பன் விடிவெள்ளியவர்களின் மறைவின் போது "வீரனே! விடிவெள்ளி" என்ற தலைப்பில்,

"ஊருக்கென்று தன்னைத்தந்த தியாகி விடிவெள்ளி!
ஊனுமின்றிச் சேவை செய்த உண்மை விடிவெள்ளி!
வாட்டமின்றி வாழ்வு வாழ்ந்த வெற்றி விடிவெள்ளி – நீ
மறைந்ததேனோ மறுமை நோக்கி இறைவா விடிவெள்ளி"

என்றவாறு தனது இரங்கல் உரையை "உதயதாரகையில்" குறிப்பிட்டுள்ளார்

க.பே.முத்தையா அவர்களிடம் உடுத்துறையில் கல்வி கற்ற மாணவர்களில் பலரும் இளைப்பாறியும் மறைந்தும் விட்டவர்களாக இருக்கின்றனர். எனினும் அவருடன் ஆசிரியராகக் கடமையாற்றித் தற்போது இளைப்பாறியவராக இருக்கும் வடிவேலு ஆசிரியரை குறிப்பிடலாம். இவர் உடுத்துறையில் பணி புரிந்த நாட்களிலேயே ஜே.பி.இளையதம்பி ஆசிரியர், ஜீ.எஸ்.சுப்பிரமணிய உபாத்தியாயர், மேரி செல்லமுத்து அம்மையார் போன்ற உடுத்துறைத் திருச்சபையின் ஆரம்பப் படிக்கற்களும், இக்கிராமத்தின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்ட மூன்று தொண்டர்களையும் உடுத்துறைக் கிராமம் இழந்தது. இச்சம்பவம் விடிவெள்ளியவர்களின் ஆரம்ப கால வளர்ச்சியில் மிகவும் வேதனைக்குரியதொன்றாகவே காணப்பட்டது. இக்காலங்களில் உடுத்துறைச் சபையின் நிர்வாகத்தினைக் கனம் ஜே.ஏ.ஆர். நவரத்தினம் போதகர் ஏ.ஈ.கேக் லூயிஸ் போதகர், ஆச்சிரமப் பெரியண்ணன், ஜெ.சுப்பிரமணியம் லூயிஸ், செல்வி.ஏச்.வி.ஹச்சன்ஸ், அம்மையார் போன்றவர்களுடைய நட்புக்கும், உடுத்துறையில் பாடசாலைக்கு வேண்டிய உதவிகளையும், ஒத்தாசைகளையும், வழிநடத்தல்களையும் இவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார். அத்துடன் நல்லூர், கோப்பாய், சுண்டிக்குளி போன்ற இங்கிலாந்து திருச்சபைக்குரிய பாடசாலைகளிலிருந்தும் இவருக்கு அதிக ஒத்துழைப்புக் கிடைத்தது.

"இந்தச் சிறியவர்களாகிய இவர்களுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்!" என்ற வேதாகம வாசகத்தை இப்பெரிய பாடசாலைகள் தமதாக்கிச் சிறிய பாடசாலைகளுக்கு உதவிகள் நல்கின. 1947ம் ஆண்டு வரை சுமார் 10 வருடங்களாகத் தனது சொந்த ஊரில் ஒரு ஊழியக்காரனைப் போன்று ஆசிரியப் பணியினைத் திறம்படச் செய்தார். உடுத்துறையில் க.பே. முத்தையா அவர்கள் செய்த பணியினை அழகாக நான்கு வரியில் கூறி விடலாம். அதாவது,

"மதுரத் தமிழ் வழிந்து
உதிரத்தோடு கலந்து
மனதில் துணிவு கொண்டு வாழ்ந்தவர்
வளரக் கலை பயின்று தேர்ந்தவர்"

உடுத்துறையில் அவருடைய திருச்சபைப் பணியினையும், அவரது வாழ்வில் காணப்பட்ட தாலந்துகளையும், வாழ்வையும், ஆசிரியப் பணியையும் கண்ணுற்ற இங்கிலாந்து திருச்சபையினர் அப்போதைய, அதாவது 1947ம் ஆண்டில் யாழ்ப்பாணத்துத் திருச்சபைகள் அனைத்திற்கும் முகாமையாளராக இருந்த வண.ஜே.ஏ.ஆர்.நவரத்தினம் போதகர் அவர்கள் இவருடைய பணியை இன்னும் அதிக விசாலமாக்க வேண்டுமென எண்ணியவராக 1948ம் ஆண்டு க.பே.முத்தையா அவர்களை யாழ்ப்பாணம் பரி.யோவான் தமிழ்ப் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராக நியமித்தார். இந்நாட்களில் விடிவெள்ளியவர்களின் சக ஆசிரியராகக் கடமை புரிந்து தற்போது இளைப்பாறியவர்களாக நமது அண்டையில் வாழும் திரு. ஜீவானந்தம், திரு. சிவசுப்பிரமணியம் போன்றவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

பரி.யோவான் தமிழ்ப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமை புரியும் நாட்களிலேயே கொழும்புத்துறை அ.மி.த.க பாடசாலையின் தலைமையாசிரியராக இருந்த திரு. இ. செல்வராசா, இசைப்புலவர் திரு. சி. செல்லத்துரை ஆசிரியர், நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர். திரு.ஜே.ஜி.அரசரத்தினம், முத்தமிழ்ப்புலவர் திரு.ஜே.எஸ். ஆழ்வார்ப்பிள்ளை, திருவாட்டி பத்மா சோமகந்தன் என்பவரையும் தனது

நண்பர்களாகப் பெற்றுக் கொண்டார் எனக் கூறுவதிலும் பார்க்க அவர்களுடன் அதிகமாகப் பழகிக் கொள்ளும் வாய்ப்பு கிட்டியது எனக் கூறலாம். ஏனெனில் விடிவெள்ளியவர்களுக்கு பல இடங்களிலிருந்தும், பல திசைகளிலிருந்தும் நண்பர்கள் காலத்துக்காலம் உருவாகிக் கொண்டேயிருந்தார்கள் என்று கூறலாம். சொற்பொழிவா? பட்டிமன்றமா? கவியரங்கமா? எதுவாயிருந்தாலும் அங்கு கவிஞர் க.பே.முத்தையா இருந்தேயாக வேண்டும் என்ற காலம் ஒன்று இருந்தது. அவர் தமது உடல், உளவலிமைக்கு மேலாகச் சமயத்திற்கும் சமூகத்திற்கும், பணிசெய்ய விழைந்தார், விரைந்தார். க.பே. முத்தையா அவர்கள் இங்கு ஆசிரியராகப் பணிபுரியும் நாட்களில் பல சமூகத் தொண்டர் ஸ்தாபனங்களில் அங்கத்தவராக இருந்ததோடு, பல சமூகத் தொண்டுகளையும் செய்ததோடு இலக்கியங்களையும், கட்டுரைகளையும் படைத்தும் இருக்கின்றார்.

எமது மறைந்த பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி.எஸ்.குலேந்திரன் அவர்கள் விடிவெள்ளியவர்களைச் சுண்டுக்குளிக்குப் போக விடாமல் தன்னுடன் வைத்துக் கொள்ளவே விரும்பினார் என்றும், தனக்கு அது விரும்பவில்லை என்றும், அவருடைய பிரியாவிடையின் போது கூறியிருக்க வேண்டும். எனினும் விடிவெள்ளியவர்கள் எதனை சரியென்று நினைக்கின்றாரோ அதனையே செய்வார். எனவே அன்று முதல் நான் உணர்ந்தது என்னவென்றால் இவர் ஒரு தீர்மானம் யோசித்து எடுத்தால் அது நல்ல நோக்குடையதும், திறமையுள்ள முடிவாகவும் இருக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

"when we wanted badly to detain him at Chavakachcheri and he decided to come to Chundukuli, I either said at his fare well or wanted to say, we don't like it, but if Muthiah wants to do it, he is right". So long ago I felt that here was a man who, if he made addecision after due thought, could do so only with the right intention and the best motive".

க.பே.முத்தையா இங்கு ஆசிரியராகக் கடமைபுரியும் நாட்களிலேயே தான் பரி.யோவான் ஆலயத்தில் வேதநாயகம்

சாஸ்திரியாருடைய பாடல்களைக் கீழைத்தேய வழிபாட்டு முறையின் கீழ் முதல் முதலாக பாடப்பட்டது. இவ்வளவு காலம் திருச்சபைக்குள் இருந்த ஞானப்பாடல்களை அகற்றி கூட்டுப்பிரார்த்தனை முறையினை கொண்டு வர முயற்சித்துப்பல பாடல்களை இங்கே வைத்தே எழுதினார். இதற்கு இசைப்புலவர். திரு.சி. செல்லத்துரை ஆசிரியரும் உடனின்று ஒத்துழைத்தார்.

> "ஏறுகின்றார் மேடையெனில் அது மகுடி நாதம்,
> எழுதுகின்றார் ஏட்டிலென்றால் அது தமிழர் வேதம்,
> மேலைத்தவர் வழிபாட்டினை நெற்கதிர் போல் தாழ்வதற்கு,
> கீழைத்தேய முறையில் விடிவெள்ளி கற்றிருந்தார், சொல்லை
> ஆழ்வதற்கு"

டி.எம்.ராஜரட்ணம் இருபாலையில் இருந்து சுண்டுக்குளிக்குப் பரி.யோவான் தமிழ் பாடசாலைக்கு மாற்றலாகி வர க.பே.முத்தையா அவர்கள் 1955ம் ஆண்டு காலப்பகுதி வரை பரி.யோவான் தமிழ்ப் பாடசாலை தலைமையாசிரியராக இருந்து, 1955ம் ஆண்டு தொடக்கம் நல்லூர் சாதனா பாடசாலையில் தலைமையாசிரியராக கடமை புரிய இடம் மாற்றம் பெற்றுச் சென்றார். யாழ்ப்பாணத்தில் இவருடைய ஆசிரியப் பணியின் காலங்களின் போது அவருடைய குடும்பத்தினர் அனைவரும் யாழ்ப்பாணத்தின் நகர்ப்பகுதியில் அமைந்துள்ள சுண்டுக்குளிப் பிரதேசத்தில் தான் தங்கியிருந்தனர். ஆசிரியராக மட்டுமல்ல ஒரு சமய பிரதிநிதியாகவும் கடமையாற்றினார் என்று பரி.யோவான் கல்லூரியில் அவர் ஆற்றிய ஆசிரியப் பணியினை திரு. ஜீவானந்தன் ஆசிரியரவர்கள் கூறிக்கொண்டார்.

க.பே. முத்தையாவினுடைய ஆசிரியப்பணியின் காலங்களில் நல்லூர் சாதனா பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமை புரிந்த நாட்களே அவருடைய வாழ்வின் முக்கியமானதும், இறுதியுமானவைகள் ஆகும். எனவே இந்தச் சாதனா பாடசாலையின் அமைவிடமான நல்லூரினைப் பார்க்கின்ற போது விடிவெள்ளியின் கவிதை தொகுப்பிலே கடவுள் வாழ்த்துப் பகுதியில் ஓர் இடத்தில் பின்வருமாறு சுட்டிக்காட்டப்படுகிறது.

"சங்கத் தமிழும் தளராத
வீர மிரண்டும் தருநிலமாய்
எங்கும் புகழ் அரசாண்ட
இனிய நல்லூர்ப் பழம் பதியில்
திங்கள் வதனச் சிறுவகுளம்
தெருட்டி மலர்ந்தும் வழிபயிற்றும்"

இவ்வாறு பாடப்படுகின்றது.

அன்றைய நாட்களில் இவருடன் கூடப் பணிபுரிந்தவர்களான திருமதி.மகேஸ்வரி செல்லத்துரை (நவாலியூரான் மனைவி) திருமதி. குமாரசாமி, திருமதி. டானியல், செல்வி. பத்மா தம்பிப்பிள்ளை, திருமதி. ஆச்சிப்பிள்ளை, செல்வி. அருள்பிரகாசம் போன்ற பலரையும் குறிப்பிட்டுக் கூறலாம். இவருடைய பல இலக்கியங்களும், கட்டுரைகளும் இங்கே வைத்துத்தான் புனையப்பட்டன. செந்தமிழும் சிலுவையும், தமிழ் அறிவு, கட்டுரைக்கதிர் போன்ற இலக்கியங்களும், பாலநேசன், ஈழகேசரி, இளங்கதிர், வள்ளுவர் மலர் சமூகத் தொண்டன் போன்றவற்றில் தனது கட்டுரைகளையும் எழுதினார். உள்நாட்டில் மாத்திரமன்று தென்னிந்தியாவில் இருந்து வெளிவரும் திருச்சபை தீபிகை எனும் வெளியீட்டிலும் இவருடைய கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

"மொத்தமாக பத்து காக்கைகளுக்கு நீ தலைவனாகலாம்.
ஆனால் ஒரு குயிலுக்கு ஆசிரியனாக முடியாது"

என்பது அமெரிக்க கவிஞர் Walt bitman அழகான கவிதை வரியினை போன்று பல குயில்களுக்கு கூவவும், பறக்கவும், கற்பித்த ஆசிரியனாக திகழ்ந்தார். இன்றைய நாட்களில் வேலணை கல்வித் திணைக்களத்தில் கடமை புரியும் அதிகாரியான "நல்லை அமிர்தம்" என்பவரும் நல்லூர் சாதனா பாடசாலையின் பழைய மாணவ சங்கத் தலைவனாக இருக்கும் திரு. குலேந்திரராசா என்பவரும், இவருடைய பழைய மாணவர்கள் இன்னும் பலர் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள அலுவலகத்தில் கடமைபுரிகின்றார்கள்.

விடிவெள்ளியவர்கள் ஆசிரியத்தொழிலின் கடமையையும், உரிமையையும் அறிந்து கொண்டவராக வாழ்ந்தார். நெஞ்சத்தால் ஒரு மனிதன், சொல்லால் ஒரு மனிதன், செயலால் ஒரு மனிதன் என்று ஒவ்வொரு மனிதனும் மூன்று வடிவமாக வாழும் இவ்வுலகில் க.பே.முத்தையா அவர்கள் ஒரே மனிதனாக, ஒரு ஆசிரியனாக வாழ்ந்தார். எனவே தான் பின்வரும் பாடலில் எது ஆசிரியனின் கடமை, உரிமை என்பதை வலியுறுத்துகிறார்.

"அன்பு சிந்தும் அருள்முகத் தாமரை
எங்கும் துய்ய இளஞ்சிறு பாலருக்
கின்ப மாகலை ஈயும் பணியுங்கள்
துன்பம் நீக்கும் துயர்தில் மாய்க்குமே.

தெய்வம் செய்த சிருட்டிகள் பாலர்கள்
உய்யவாழ உழைத்திடல் செல்லும் நீர்
பொய்மை யின்றியிப் புண்ணியம் செய்திடல்
வையம் என்றும் வழங்கும் துதிகளே.

மேவு காகிதம் மேசை கதிரையின்
ஆவியற்ற அலுவலகமன்று
சீவனுள்ள சிறுவரைக் கற்பிக்கும்
கோவில் என்பது கொள்ளுக நாளுமே"

"கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு" என்பதைப் போன்று தன்னை ஒரு ஆசிரியனாக அதுவும் தமிழிலே இனங்காட்டிக் கொண்டு தமிழைக் கற்பதிலே தேடல் மிக்கவராகவே இருந்தார். நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகனாகிய புலவர் இளமுருகனாரின் தமிழை ஐயந்திரிபறக் கற்றார். இவரிடமே பின் நாட்களில் க.பே.முத்தையாவின் உற்ற நண்பனாகிய கவிஞர் விக்டர், ஜெயம் தமிழிலே தன்னை வளர்த்துக் கொண்டார். திரு.க.சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் க.பே.முத்தையாவைப் பற்றிக் கூறுகின்ற போது "சுவாமி ஞானப் பிரகாசர் கத்தோலிக்க மதத்தில் பணி புரிந்து கொண்டு அம்மதத்துக்குத் தமிழ்

கலாச்சாரத்தைக் கொண்டு வரப் பாடுபட்டுப் பின் எவ்வாறு அதில் வெற்றியும் ஈட்டினாரோ அவ்வாறே, விடிவெள்ளியவர்களும் ஒரு சமயக் குரவராக இல்லாமலேயே தமிழையும், தமிழ்க் கலாச்சாரத்தையும் புகுத்தி அனைத்துப் பிரிவினருக்கும் கீழைத்தேயப் பண்பாட்டைக் கொண்டது தான் கிறிஸ்தவம் என்பதை ஒப்பு நோக்க வைத்தவர்.

"நாயாகப் பிறந்தாலும்
தமிழ்த் தொண்டர் முன் தானே வால்குழைப்பேன்...
வெறி நாயாக அலைந்தாலும் "தமிழ்", தமிழ்"
என்று தானே நான் குரைப்பேன்".

என்று தமிழ்ப் போர்ப்பரணி செய்தவர். எல்லோருடைய சமயத்தையும் கௌரவிக்கக் கற்றிருந்தார். அன்றைய நாட்களில் நல்லூர் சாதனாப் பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் உறுப்பினர்களாக அங்கம் வகித்தவர்கள் பலரும் மறைந்த பல வருடங்கள் சென்ற பின்பும் கூட அவரின் பணியினைத் தன்னுடன் பேசி இன்புற்றார்கள் என விடிவெள்ளியவர்களின் நண்பன் திரு. நவாலியூரான் செல்லத்துரை ஆசிரியர் அவர்கள் கூறினார்.

"சாதனாப் பாடசாலைத் தலைமையாசிரியனாகிப்
போதனை செய்யவுன்னைப் போன்றவரெவருங் கிட்டார்
நெற்றியிற் றிலகம் போல நின்றெங்கும் நீண்ட கீர்த்தி
முற்றிய எமது க.பே.முத்தையா. ஆப்த நண்பா!

என முத்தமிழ்ப் புலவர் ஜே. எஸ்.ஆழ்வாப்பிள்ளை பிரிவிரக்கக் கவியில் பாடுகின்றார்.

க.பே.முத்தையா அவர்கள் பரிசுத்த திருநாள், வருகையின் காலம், உயிர்ப்பின் பண்டிகை போன்ற பண்டிகை நாட்களில் தனது பாடல்களை ஆயத்தம் செய்வார். சுதேச மறையில் பல பாடல்கள் பாடப்பட்டது. திருவிருந்தின் போது மறுமொழி கூறுதற்குக் கீழைத்தேய முறைப்படி பாடல்களை இயற்றினார். திரு.திருமதி ஆனந்தநாயகம் தம்பதிகளினுடைய அநேக பாடல்கள் இவருடைய பாடல்களே பாடப்பட்டது.

விடிவெள்ளியவர்கள் பாடல்களை எழுதிக் கொடுக்க அத்தம்பதியினர் அதனை இராகம் போட்டு உயிர்நாதமூட்டுவார்கள். விடிவெள்ளியவர்களுடன் அதிகமாக உழைத்தவர்களில் இத்தம்பதியினரும் குறிப்பிடத்தக்கவர்கள். இதனை மறைந்த எமது பேராயர் அதிவண. எஸ். குலேந்திரன் அவர்களும் THE WORD MEN AND MATTERS என்ற தனது நூலில் குறிப்பிடுகின்றார். அதில் "பல தாலந்துகள்" பெரிய செயல்கள் எல்லாம் சில தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமானது. ஆனால் எல்லோருக்கும் பொதுவாக இருப்பது நேரம் ஒன்று தான், தனது நேரத்தை அதிகம் மற்றவர்களுடன் செலவிட்ட ஒருவர் என க.பே.முத்தையாவைச் சுட்டிக் காட்டுகின்றார்.

எமது ஆதீனப் புத்தகத்தில் 14 பாடல்கள் இவருடைய பாடல்களாக இருக்கின்றன. மருதனார்மட ஆச்சிரமத்தின் உயிர்ப்பு விழா பஜனை யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கிலே நடைபெறும் போது முதன் முதலாக அந்த பஜனையைத் திறம்பட நடாத்தி முடித்த பெருமையும் இவரையே சாரும். ஆண்டுதோறும் க.பே.முத்தையா அவர்கள் ஒரு சிறு தொகுதிப் பாடல்களை இயற்றி இவ்வாச்சிரமத்துக்கு வழங்குவது வழக்கம். ஆச்சிரமத்தின் மீது பற்றுள்ள நண்பனாக இருந்தார். தனது இறுதிக் காலத்தை ஆச்சிரமத்திலே கழிக்க வேண்டும் எனப் பிரயாசப்பட்டவர். அதனையே கூறி வந்தார் எனவும் வண.டி.ஆர். அம்பலவாணர் அவர்களால் எழுதப்பட்ட பெரியண்ணனின் வாழ்க்கைக் குறிப்பேட்டில் இதைக் குறிப்பிடுகிறார்.

மருதனார் மடத்திலிருந்த திருச்சபையின் STUDY CENTRE கிறிஸ்தவ, சமூக, சமய, ஆராய்ச்சி மன்றத்தின் பல கருத்தரங்குகளில் கிறிஸ்தவப் பெரியார்களைப் பற்றி வண.டி.ஆர்.அம்பலவாணர் அவர்களுடன் சேர்ந்து பல உரைகளை ஆற்றியுள்ளார். ஏனையோரின் சொற்பொழிவுகட்கும் விடிவெள்ளியவர்களின் சொற்பொழிவுகட்கும் பல வித்தியாசங்கள் காணப்படும். கடவுளைப் பற்றியதும், இரட்சிப்பைப் பற்றியும், பாவத்தைப் பற்றியதுமான இவரது எதிர்நோக்குகள் வித்தியாசமானதாக இருந்தது. ஏனெனில் அவர் இந்து சமயத்திலிருந்து வந்த படியினாலே கிறிஸ்துவையும் ஆழமானதொரு உறவாகவே எதிர்நோக்கினார்.

# உதயமாகும் விடிவெள்ளியின் திருச்சபைப் பயணம்

## திருச்சபைப் பணிகள்:

உடுத்துறை எனும் இச்சிறு கிராமத்துக்குக் கர்த்தர் காட்டிய இரக்க உருக்கங்கள் அளவிறந்தன. அவ்விரக்கங்களின் உச்ச நிலை என்று எதனைக் குறிப்பிடலாமெனில் இவ் உடுத்துறை நற்செய்திப் பணியால் வளர்ந்த அரிய முத்துக்களில் ஒன்று க.பே.முத்தையா எனும் விடிவெள்ளியைக் கொடுத்ததே. இங்கே உடுத்துறைச் சபை தனியாகவும்

க.பே.முத்தையா என்பவரையும் தனியாகப் பிரித்துப்பார்க்க முடியாத நிலையை நாம் காணலாம். ஏனெனில் க. பே.முத்தையா அவர்களின் வாழ்வில் அவர் இத் திருச்சபையிலும் தன்னுடைய கிராமத்திலும் இருந்த ஒவ்வொரு மிஷனரிமார்களையும் அவர்கள் பட்ட பாடுகளையும், ஒவ்வொரு ஊழியர்களையும் அவர்களது பணிகளையும் வாய்மொழி மூலமாக மட்டுமன்றிக் கண்களாலும் கூடக் கண்டும் இருக்கின்றார். எனவே க.பே.முத்தையாவின் வாழ்க்கையானது தனது சூழலுடன், தனது சபையுடன் ஒட்டியதாகவே காணப்பட்டது. எனவே அவர் தனது உடுத்துறைக் கிராமத்துக்கும் தனது திருச்சபைக்கும் உண்மையிலேயே ஒரு விடிவெள்ளியாகவே திகழ்ந்தார் என்றால் மிகையாகாது. விடிவெள்ளி அவர்கள் தனது நூலில் அத்திருச்சபையானது அக்கிராமத்துக்கு எவ்வாறு இருந்தது என்று குறிப்பிடுகின்றார் எனில்,

" இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் தேசத்திலே குடியிருக்கிறவர்கள் மேல் வெளிச்சம் பிரகாசித்தது என்றும்" இது ஒரு அதிசயமே என்றும் கூறுகிறார். ஏனெனில் இக்கிராமமானது அந்தகார இருளினால் மூடப்பட்டுக் காணப்பட்டது. மூட நம்பிக்கைகளும், விக்கிரக வழிபாடுகளும், சமயக் காப்பு, புற சமயக் களிப்பு, துவேஷத் தன்மைகளைக் கொண்டதாகவும் காணப்பட்டது. அத்துடன் சுற்றியுள்ள நான்கு கிராமங்களிலும் கிறிஸ்தவ மதம் இன்னும் அறியப்படாத ஒரு விடயமாகவும் இருக்கின்றது. எனவே இச்சரிதத்தின் காலம் யாது எனப் பார்க்கின்ற போது கி.பி. 1850ம் ஆண்டளவில் தான் இக்கிராமம் அந்தகார இருளால் மூடப்பட்டிருந்தது. அத்துடன் அயல் கிராமங்களுடன் தொடர்புகளை வைத்திருப்பதற்குக் கூட சாதாரண வண்டிப் பாதைகள் கூட இல்லாமல் இருந்தது.

இவ்வாறான பௌதீகக் காரணிகள் அனைத்தையும் கடந்து கடவுளின் செயலாக்கம் நடைபெறுவதை நாம் இங்கு காணக்கூடியதாக இருந்தது. கடவுளின் செயலாக்கம் எனும் போது "ரோம்ரன்", "வயல்வீல்டு" என்ற இரு ஆங்கில தேசத்துக் கிறிஸ்தவ பக்தர்கள் இக்கிராமத்துக்கு வருகை தந்தமையே பல பிரயாணக் கஷ்டங்களின் மத்தியில் கடலையும் உப்பாறுகளையும், மண் செறிவுகளையும் தாண்டி கடந்து வந்து அன்று

மிகவும் பழமை வாய்ந்த இரண்டு தென்னந்தோட்டங்களை வாங்கி அதைப்பராமரித்து அங்கே தங்கித் தங்கள் நாட்களைக் கழிக்கலாயினர்.

இவ்விரு துரைமார்களின் வருகையினால் தான் இக்கிராமத்துக்கு ஒரு விடிவு காலம் மலரத் தொடங்கிற்று எனலாம். எனவே இக்கிராம மக்களுக்கு இவ்வளவு காலமும் இருந்த வறுமைகள் நீங்கி, பொருள் வருவாயும் தொழில் வாய்ப்பும், மகிழ்வும் உண்டாயிற்று. இக்கிராம மக்களின் அக வாழ்வைப் பார்ப்போமாயின் அறியாமையில் இருந்து கொண்டு அவர்கள் அறியப்படாத இறைவனை வழிபட்டு வந்தனர். அன்பின் இறைவனை அவர்களால் அறிய முடியாமல் போய்விட்டது. இதனைக் கண்ணுற்ற துரைமார்கள் முதலில் இவர்களின் அறியாமையை நாங்கள் போக்க வேண்டும் என்றெண்ணி நற்செய்திப் பணியில் இறங்கினர். இவ்விரு துரைமார்களும் தான் கிறிஸ்து இயேசுவினுடைய அன்பை அறிவிப்பதற்காக இக்கிராமத்திற்கு அனுப்பப்பட்ட முதற்தூதர் என்று கூறினாலும் மிகையாகாது. இக்காலத்தில் இங்காவது பச்சிலைப்பள்ளிப் பகுதியிலாவது, பளைப் பகுதியிலாவது ஒரு கிறிஸ்தவனோ இருந்ததில்லை எனலாம். இக்கிராமத்து மக்கள் அறிவுத்தேடல்களைக் கூட அறிந்துக் கொள்ளக்கூடிய பாடசாலைகள் கூட அக்காலத்தில் காணப்படவில்லை எனலாம். கல்வி அறிவு எவ்வளவு முக்கியம் என்பதைத்தான் பின்வரும் குறள் விளக்குகின்றது.

> "எண்ணென்ப தனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

இவ்வாறு எண்ணும் எழுத்தும் என வாழும் மக்களுக்கு இரு கண்கள் போன்றவை எனக் குறிப்பிடப்படுகின்றது. மக்களின் அறிவுக் கண்களைத் திறக்க வேண்டும் என விளங்கிக் கொண்ட தோட்டத் துரைமார்கள் உடுத்துறையின் மேற்கெல்லையில் ஒரு தமிழ்ப் பாடசாலையை ஸ்தாபித்தனர். இப்பாடசாலையை அறிவுத் தேடலுக்கான ஒரு மைய ஸ்தாபனமாகவும், சுவிசேஷத்தின் ஒளி பிரகாசிக்கும் ஒரு இடமாகவும் கொண்டு கடவுளின் சுவிசேஷ வேலையை விருத்தி செய்யத் தொடங்கினர். இப்பாடசாலையே பச்சிலைப்பள்ளிப் பகுதியில் முதன்முதலில் கட்டப்பட்ட பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விரு துரைமார்களும் இங்கிலாந்துச் திருச்சபையின் அங்கத்தவர்கள் ஆகையால், தமது தாய்த் திருச்சபைக்கு எழுதி இப்பாடசாலைப் பொறுப்பினை ஏற்று நடாத்தும் படி கூறினார்கள். இவர்களின் வேண்டுதலுக்கு இணங்க சிறந்த பக்தனும், தெய்வ அனலும் நிறைந்தவருமான கனம் "ஜோர்ஜ் டானியல்" எனும் ஆசிரியர் பாடசாலைக்கு ஆசிரியராக உடுத்துறைக் கிராமத்துக்கு வந்தார். இவர் தமது ஆசிரியப் பணியினைச் செய்வதோடு நின்று விடாது கூடவே சுவிசேஷ ஒளியை இக்கிராமத்தில் பரப்புவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார். இலங்கையிலே பணியாற்றிய மிஷனரிமார்கள் கல்வியைச் சமயப் பிரசாரத்தின் முக்கிய சாதனங்களின் ஒன்றாகக் கொண்டமையினால் யாழ்ப்பாணத்தில் புத்திஜீவிகளுடன் கலந்துரையாட வழி பிறந்தது எனலாம். தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத்தையும் கற்றுக்கொள்வதற்காகத் தென்னிந்தியாவில் பணியாற்றிய மதப்பிரசாரகர்களுக்கும் கிட்டாத பல வாய்ப்புக்கள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய மிஷனரிமார்க்குக் கிட்டியது எனலாம்.

எனவே இவ்வாசிரியர், ஜோர்ஜ் டானியல் அவர்களது பணியின் மூலமாகவும், புத்திஜீவிகளுடன் காணப்பட்ட உறவின் மூலமாகவும் 1862ம் ஆண்டு இவருடன் சேர்ந்து ஒன்பது கிறிஸ்தவர்கள் இக்கிராமத்தில் இருந்தனர். இந்த ஒன்பது பேரிலும் சிலர் உடுத்துறைக் கிராமத்தவர்கள் அல்லர். ஒரு சிலர் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்கள். அமெரிக்க மிஷனரிமாரின் பணிக்கு அடிகோலிய சம்பவமான மாசாச்சு செற்ஸ் மாநிலத்தில் பக்தி இயக்கம் தோன்றியதோ அவ்வண்ணமே உடுத்துறைச் சபைக்கும் இக்கிறிஸ்தவ நவஜீவிகளும் காணப்பட்டனர். அக்காலத்தில் ஒரு நாள் இவ்வாசிரியர் கூட்டம் நடாத்தி முடித்த பின் தங்கள் முன் இருந்த "சோற்றில் தொட்டு அதை சாட்சியாக வைத்து கிறிஸ்து சுவாமியை விட்டுப் பிரியோம்" என்று ஆணையிட்டார்கள். இது அவர்களின் பக்தி வைராக்கியத்தையும், துணிச்சலையும் எடுத்துக்காட்டுகின்றது.

இக் குறிப்பிட்டதான சம்பவத்தில் பின்னர் கற்கோவளம் என்னும் இடத்திலிருந்து உடுத்துறையில் வைத்தியத் தொழில் செய்து வந்த திரு. வீரபத்திரி என்பவரும், காத்தார் வேலு என்பவரும் தமது பழைய மூட நம்பிக்கைகளை மறந்து கிறிஸ்து இயேசுவைக் கண்டடைவதற்கு கனம்

ஜோர்ஜ் டானியல் ஆசிரியர் அவர்களே காரணமாவார். அக்காலத்தில் பாடசாலைகள் அரசாட்சியாரின் பொறுப்பில் இல்லாமையால் இப்பாடசாலையை நடாத்தி வந்த இங்கிலாந்துத் திருச்சபையின் யாழ்ப்பாணக் கிளையினர் பணப் பற்றாக்குறை ஏற்பட்டபோது இவ்வளவு காலம் பணிபுரிந்து வந்த ஆசிரியர் திருப்பி அழைக்கப்பட்டார். இந்நிலையில் உடுத்துறையில் ஒரு சம்பவம் நடைபெற்றது. இவ்வூர் பிறப்பாளரும், மிகுந்த பணக்காரனும், மதிப்பும் உடையவருமான "திரு. மாதர் ஆனந்தர்" எனும் பெரியார் தாமே வேதனம் இன்றி இலவசமாகக் கிறிஸ்தவக் கட்டுப்பாடுகளுக்கு இணங்கிப் பாடசாலையை நடாத்த முன்வந்தார். இச் சம்பவம் இக்கிராமத்தில், இச் சமூகத்தில் மேலும் பலர் கிறிஸ்துவை அறிந்து கொள்வதற்கு அடிகோலியது எனலாம். இவர் பெருத்த சைவசமய அனுசாரியாக இருந்த போதிலும் கிறிஸ்தவ சபைப் பிரமாணங்களுக்குட்பட்டுப் பிள்ளைகட்கு இலவசமாக கல்வி கற்பிக்க உடன்பட்டு வந்தமை இவரது பெருந்தன்மையறிவைக் காட்டுவது மாத்திரமல்ல, கற்களிலிருந்து ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராகிய தெய்வத்தின் கிருபையையும் நன்கு வெளிப்படுத்திக் காட்டுகின்றது. மிஷனரிமார்களின் பணியை இவர் அறிந்திருந்தார். மேலும் கிறிஸ்தவ சத்தியம் உண்மைத் தன்மையுள்ளது என்பதையும் அறிந்து சைவ சமயமாக இருந்த போதிலும் ஊழியர்களோடு துணைநின்று உற்சாகமாக வேலை செய்யும் படி கடவுள் தான் இவரை ஏவினார் எனலாம்.

1874ம் ஆண்டு மார்கழி மாதம் 21ம் திகதி யாழ்ப்பாணத்தின் இங்கிலாந்து திருச்சபையின் தலைமை மிஷனரியாகிய "ஜே.டி.சிமன்ஸ்" ஐயர் அவர்கள் உடுத்துறைக் கிராமத்துக்கு ஊழியம் செய்ய இங்கு வந்திருந்தார். அவருடன் "சாலமன்" எனும் பெரியாரும் சேர்ந்து பணியினைச் செய்து வந்தார். இவர்கள் கடற்கரையோரங்களில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் கிராமத்தவர்கள் மத்தியில் தமது ஊழியங்களை செய்து வந்தனர். இங்கு பணி புரிந்த மிஷனரிமார்களும் சரி, உள்ளூர்க் கிறிஸ்தவர்களும் சரி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கின்ற போது மிகுந்த இடர்பாடுகளையும் சந்திக்க வேண்டியிருந்த நிலையினை நாம் உடுத்துறையின் வரலாற்றில் காணக்கூடியதாக இருக்கின்றது.

அக்காலத்தில் கிறிஸ்தவர்களை தொடுவதும், அவர்கள் தங்கும் வீடுகளில் மிதிப்பதும், அவர்களுக்கு உணவு கொடுப்பதும் மகா தீட்டான காரியமென அக்கால சமுதாயத்தினர் எண்ணியிருந்தனர். தாகத்திற்கு நீராவது, பசிக்கு உணவாவது கொடுக்காது இருப்பதோடு இருப்பதற்குக் கூட ஆசனம் கொடுக்க மாட்டார்கள். ஒரு அழுக்குப் படிந்த உரலைத்தான் இருக்கக் கொடுப்பார்களாம். எனவே இவர்களின் பசி, தாகத்தைப் போக்க வேண்டுமாயின் ஒன்பது மைல்களுக்கப்பால் உள்ள பளைக்கிராமத்துக்குச் சென்று தான் தமது களைப்பை ஆற்றவேண்டியிருந்தது. கிறிஸ்தவ மதத்தினருடன் உறவுகளை வைத்திருப்பதே தீட்டென எண்ணிய காலங்களும் உண்டு. மிகவும் இறுக்கமாகக் கோட்பாடுகளைத் தங்கள் நாளாந்த வாழ்க்கையில் சைவ மதத்தின் பெயரால் கடைப்பிடித்து வந்தார்கள்.

பல இன்னல் இடர்கள் மத்தியிலும் கடவுள் தமது பணியினைச் செவ்வனே நிறைவேற்றுவதற்காகத் தமது தாசர்களைக் காலத்துக்குக் காலம் ஒருவர் பின் ஒருவராக சபைக்கும், உடுத்துறைக் கிராமத்துக்கும் அனுப்பி வைத்தார். திரு.என்.எல் யோசுவா என்னும் வைத்தியனை அனுப்பினார். அதன் பின்னர் கனம் டி.எஸ் சின்னத்தம்பி உபதேசியார் அவர்களை அனுப்பி வைத்தார். அதன் பின் ஐ. பெக்காஸ் போதகர் அவர்களையும், கனம் டி.பி. மூத்ததம்பி உபதேசிகர் அவர்களையும் அவருக்குப்பின் கனம் எஸ். எஸ். டானியல் போதகரும், கனம் எஸ் இரத்தினாக்கம் போதகர் அவர்களையும் கடவுள் தனது பணியினைச் செய்ய அனுப்பி வைத்தார். இத்தாசர்களின் பணியின் பின் நடைபெற்றதான அனைத்து சம்பவங்களையும் எமது விடிவெள்ளியவர்கள் காலத்துடன் ஒட்டியதாகவும் சில சம்பவங்களில் விடிவெள்ளியவர்களும் கூட இருந்தவராகவும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஒருவராகவும் காணப்பட்டார்.

1910ம் ஆண்டு உடுத்துறைச் சபையில் ஊழியனான வண. எம். எஸ்.டானியல் போதகர் அவர்கள் உடுத்துறைச் சபையை ஒரு சிறிய கொலோசேய சபை எனக் குறிப்பிடுவாராம். அத்துடன் ஒரு நாள் இவர் ஒரு சைவ மதத்தைச் சேர்ந்தவரது வீட்டிற்குச் சென்ற போது பாலுடன் நஞ்சு கலந்து கொடுக்கப்பட்ட சம்பவமும் ஒன்று உண்டு. நான் மேலே கூறிய

பிரகாரம் கனம். எஸ். இரத்தினாதிக்கம் போதகர் அவர்கள் உடுத்துறையில் ஒரு பதினைந்து வருடம் நல்ல ஊழியமும் செய்தார். 1916ம் ஆண்டு தொடக்கம் 1936ம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் தான் எமது விடிவெள்ளி அவர்களின் முக்கியமான பாலியப்பருவமாகும். இப்பருவத்திலே தான் எமது விடிவெள்ளி அவர்கள் அதிகமான சம்பவங்களைப் பார்த்தும் கேட்டும் இருப்பார். இவ்வூழியர்களின் வாழ்க்கையிலிருந்தும், விடிவெள்ளியை மிகவும் தாக்கியதாக இருக்கின்றது.

திருமறையில் பவுல் அடிகளார் தமது மதத்தில் பக்தி வைராக்கியம் கொண்டவராகக் கிறிஸ்தவ அடியவர்களைத் துன்புறுத்தினாரோ அதன் பின் எவ்வாறு உயிர்த்த கிறிஸ்து அவரைத் தடுத்து ஆட்கொண்டு அதன் பயனாகக் கிறிஸ்துவின் பணியினைப் பல பாடுகள், நிந்தைகள் மத்தியில் நிறைவேற்றியதைப் போன்று எமது விடிவெள்ளியவர்கள் தன்னைப் பற்றியும் கூறுகின்ற போது பின்வருமாறு கூறுகின்றார். "கிறிஸ்துவையும் சத்திய மார்க்கத்தையும், கிறிஸ்துவின் வசனங்களையும், கிறிஸ்துவின் ஊழியர்களையும் பகிரங்கமாகப் பகைத்துத் திரிந்தவன் நான் முள்ளில் உதைத்துக்கொண்டு திரிந்தேன்" எனவும் தனது நூல்களில் நினைவு கூருகின்றார்.

1935ம் ஆண்டளவில் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு நாம் முன்பு குறிப்பிட்டது போல "பேதுரு" என்ற மறு நாமத்தையும் தரித்துக் கொள்கின்றார். இவரது மனமாற்றத்தின் பின் பலரும் கிறிஸ்துவை தமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் நிலை அங்கே காணப்பட்டது. தமக்கென்று ஒரு ஆலயம் இல்லையே என்ற அங்கலாய்ப்புத் திருச்சபை மக்கள் மத்தியில் பலருக்கு ஏற்பட்டது. எனவே ஆலயப் பணிக்கென பலரும் பொருள், பணம் என்று பலரிடம் சேகரிக்கப்பட்டது. எமது விடிவெள்ளியவர்கள் இப்பணியில் முன்னின்று செயற்பட்டார். 1933ம் ஆண்டு கனம் ஜே.ஏ.ஆர். நவரத்தினம் அடிகளாருடன் கூட ஊழியத்தில் பங்கு கொண்டு ஆலயப்பணிக்கென அரும்பாடுபட்டார். இதனால் 1939ம் ஆண்டு ஆடி மாதம் 21ம் திகதி உடுத்துறைக்கிராமத்தில் ஒரு ஆலயம் வேண்டும் என்பதை உணர்ந்து

அப்போது கொழும்பு ஆர்ச் டிக்கனாக கடமைபுரிந்த சங்கை. கனம் எவ். எல்.பெவன் போதகர் அவர்கள் உடுத்துறைச்சபைக்கான அஸ்திபாரத்தை இட்டார்கள்.1933ம் ஆண்டு எரிந்து சேதமான் உடுத்துறை பாடசாலையும் மீளவும் செப்பனிடப்பட்டுப் புதுப் பொலிவுடன் இன்றும் மிளிர்வதற்கு எமது விடிவெள்ளியவர்கள் காரணமாவார். 1934ம் அண்டு ஆவணி மாதம் 2ம் திகதி உடுத்துறைச் சபையில் மறக்க முடியாத நாளாக இருக்கின்றது. இச்சபையில் ஆண்களும் பெண்களுமாக எட்டுப்பேர் திடப்படுத்தலைப் பெற்றனர். இதனைக் கொழும்பு அத்தியட்சகராக இருந்த மகாகனம் மார்க் காப்பென்ரர் அவர்களே உடுத்துறையில் நடாத்தி வைத்தார். இவ்வாராதனைகள் எல்லாம் வழமைபோல உடுத்துறைப் பாடசாலையிலேயே நடைபெற்றுவருவதைக் காணலாம். ஏனெனில் இன்னும் ஆலயக்கட்டுமானப் பணிகள் முடிவடையவில்லை.

1938ம் ஆண்டு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அது என்னவென்றால் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட வருடமே இவ்வருடம். இரண்டு நாள் நிகழ்ச்சியாக இங்கு கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் அப்போது முழு யாழ்ப்பாணத்திலிருந்தும் பெரும் திரளான மக்கள் பல பாகங்களிலும் இருந்து வந்த போதகரும் சபையினருமாக 950 பேர் வரை இதில் கலந்து கொண்டனர் எனலாம். பரிசுத்த மகதலேனா மரியாளின் திருநாளில் ஞாபகார்த்தமாக அப்பெயரோடு இவ்வாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

எமது விடிவெள்ளியவர்கள் ஞாயிறு ஆராதனைகளில் தனது தனித்துவமான பாடல்களால் சபையாரை மகிழ்விப்பார். சபையின் வளர்ச்சி நாளுக்கு நாள் பெருகியது. 1941ம் ஆண்டு காலப்பகுதியில் திருவிருந்து அருந்துவோர் எண்ணிக்கை 22 பேராகவும், 14 குடும்பங்களாகவும் இருந்தார்கள். பல இடங்களிலிருந்தும் மற்றும் நல்லூர், கோப்பாய் மற்றும் சுண்டிக்குளி போன்ற இடங்களிலிருந்தும் பல கிறிஸ்தவ மக்கள் இங்கு வந்து சபையினரை உற்சாகப்படுத்திச் சென்றனர். இதற்கு இலைமறைகாயாக இருந்து செயற்பட்டவர் விடிவெள்ளியவர்களே என்றால் மிகையாகாது. அத்துடன் பல துண்டுப் பிரசுரங்களையும் விடிவெள்ளியவர்கள் வெளியிடுவதோடு தனது ஆசிரியப்பணியினை

மேற்கொண்ட போதெல்லாம் கிறிஸ்துவையும் எடுத்துக் கூறத் தவற மாட்டார். நாங்கள் உடுத்துறைச் சபையின் வரலாற்றில் எவ்வாறு மிஷனரிமார்களின் பணியினை நினைவு கூருகின்றோமோ அதே வண்ணமாக விடிவெள்ளியவர்களின் காலத்தையும் நினைவுக்கூரக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். விடிவெள்ளியவர்களின் காலத்தில் தான் உடுத்துறைக் கிராமத்தைப் பலரும், புத்திஜீவிகளும் அறிய ஏதுவாக இருந்தது. விடிவெள்ளி அவர்களின் புலமைகளை அறிந்தவர்கள் அக்கிராமத்தை அறிந்துகொண்டார்கள்.

உடுத்துறைச் சபையின் ஆரம்ப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் முக்கியமான ஒன்று. இதனால் தான் இன்று பலரும் திருச்சபைகளிலும் இக்கிராமத்திலிருந்து பலரும் ஊழியத்திற்கு என்று எழுந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இத்திருச்சபை 130 வருடங்களைத் தாண்டிய ஒன்றாகவும் பல விசித்திரமான கதையையும் வரலாறுகளையும் கூறுவதாக உள்ளது. விடிவெள்ளியவர்களைக் கொண்டே இத்திருச்சபையின் சரித்திரத்தைப் புனைவதற்குக் கடவுள் கருணை செய்துள்ளார் எனலாம். இந்நூலில் இவர் "திருச்சிலுவையந்தாதி" எனும் ஒரு சிறு பிரபந்தத்தை உருவாக்கி தான் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட போது தனது பாவ அகோரத்தையும், அசுத்தத்தையும் அவரது அன்பின் கிருபையையும் ஒப்பிட்ட போதே இவ் அந்தாதி உருவாகியது எனக் கூறுகின்றார். விடிவெள்ளி அவர்கள் தனது ஆரம்பகால மீறுதல்களை அறிந்துகொண்டு அதனை எந்நேரமும் நினைத்து நருங்குண்ட நொருங்குண்ட இதயத்தோடு கிறிஸ்துவிடம் கிட்டிச் சேர்ந்தது மட்டுமல்ல, கிறிஸ்துவின் மீது அதே பற்றுதலையும் உருவாக்கிக் கொண்டார். இதனால் தான் இன்னும் அவர் மறைந்த பின்னும் உடுத்துறைச் சபையின் குரு இல்லத்தின் பெயர் (Mission House) அவருடைய பெயரைத் தாங்கியதாக காட்சியளிக்கின்றது. இன்னும் அக்கிராமமும், அச்சபையும் பல வருடங்களைக் கடந்தும் தன்னகத்தே பல புத்திஜீவிகளை உருவாக்கிக் கொண்ட போதிலும் தனது ஆரம்பகால ஊழியங்களையும் தொண்டர்களையும் அது மறக்கவில்லை எனலாம்.

# உதயமாகும் விடிவெள்ளியின் இலக்கியப் பயணம்

உலகத்திற்கு உயிர்ப்பாற்றலை வழங்கும் ஒளி ஞாயிறு ஒருநாளும் மறைவதில்லை. அதைப் போலவே, இலக்கிய வளங்கொழிக்கும் மொழிகளிலும், உயிர்த்துடிப்புள்ள கவிஞர்கள், இலக்கியவாதிகள் இடையாறாது தோன்றி, அம்மொழிகளின் வழிகளுக்கு ஒளியூட்டி , வழிகாட்டி வருகிறார்கள்.

வெய்யோனின் வெப்பம் எல்லாப் பருவங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அவ்வாறே படைப்பாளிகள் வாழும் காலச் சூழ்நிலைக்கு ஏற்பவே அவர்கள் படைப்புக்கள் உருவாகின்றன.

இந்த அடிப்படையில் வளருந் தமிழ் இலக்கிய உலகை வலம் வரும்போது, நம்மிடையே வாழ்ந்து மறைந்த அமரர். கந்தையா பேதுரு முத்தையாவின் இலக்கியப் படைப்புக்கள் சிறிய வரையறைக்குள் இருந்த போதிலும் அவைகளை இன்றைய இளைய தலைமுறைகள் பார்க்கின்ற போது பெரும் கவிஞராகவும், இலக்கியவாதியாகவும் விடிவெள்ளி திகழ்கின்றார்.

கதிரவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வண்ண மலர்கள் பல, அவற்றுள் சொல்லத்தக்கன தாமரையும், சூரியகாந்தியும், கதிரவன் தோன்றும் போது தன் கமல முகம் மலர்ந்து அந்தி மாலையில் அவன் மலை வாயிலில் வீழும் போது, தாலும் தன் இதழ்களை மூடிக் கொள்ளும் தாமரை.

கதிரவன் ஒளி வரவுக்காக நம்பிக்கையோடு காத்திருந்து அவன் சுடர் தோன்றும் திசையில் ஆசை பொங்க விழித்துப் பின் அவன் செல்லும் திசையெல்லாம் தானும் திரும்பி மயாங்கி, அவன் மறையும் போது, நாவித் தலை கவிழ்ந்து பிரியாவிடை கொடுப்பது சூரியகாந்தி.

இலக்கியங்களையும், கவிதைகளையும் சுவைக்கும் ரசிகர்களில் பெரும்பாலோர் இந்த இரு வகையினர் தாம்!...... இவற்றில் நம்மை எல்லாம் சூரியகாந்தி மலர்களாக்கி விட்ட, சுடரோன் விடிவெள்ளி. யாழ்ப்பாணத்தில் க.பே.முத்தையாவுக்கு என்றும் அவருடைய படைப்புக்கு என்றும் காத்திருந்த வெளியீட்டாளர்கள் பலர். அதனை ரசனையுடன் உள்வாங்க ஒரு ரசிகர் கூட்டம் காத்திருந்தது.

எமது விடிவெள்ளி அவர்களுடைய "செந்தமிழும் சிலுவையும்" என்ற இலக்கியப் படைப்பு ஈழநாட்டுத் தமிழ்க் கிறிஸ்தவர்களுள் சிறப்பான கிறிஸ்தவ எழுத்தாளனாக, படைப்பாளனாக அவரை இனம் காட்டிற்று. தமிழகத்தில் பிறந்த மதங்களும், புகுந்த மதங்களும் தமிழ் மொழியைப் பேணி வளர்த்தன. சைவரும், வைணவரும், சமணரும், கிறிஸ்தவர்களும், மகமதியர்களும் பல சிறந்த தமிழ் நூல்களியற்றித் தமிழன்னைக்கு அழியாத திருப்பணி புரிந்தார்கள். மேலைத்தேயவர்கள் இங்கு வந்து கிறிஸ்தவத்தை மட்டும் பரப்பினார்கள் என்பது இன்றளவும் இருந்து வருகின்ற கருத்து. இத்தப்பறையைத் தகர்த்து அவர்கள் தமிழை வளர்த்துத் தமிழ் இலக்கியங்களைப் படைத்தார்கள் என்பதை ஆசிரியர் கூற வருகின்றார். "இந்நூலினை வாசிப்போர் கிறிஸ்தவ தமிழ் இலக்கியத் தெளிவாக விளங்கி இன்புறுவது நிச்சயம். அத்தோடு, இந்நூலில் குறிப்பிட்ட ஆசிரியர்களின் எழுத்துக்களையும், கவிகளையும், வாசகர்கள் தேடி வாசிக்கத் தூண்டப்படுவாரென்பதில் ஐயமில்லை" என வண.டி.ஆர் அம்பலவாணர் தனது முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

இலங்கைத் தேசியக் கிறிஸ்தவ சங்கத்தின் கிறிஸ்தவ இலக்கியப் பிரசுர சபையினருடைய வெளியீடாக வந்த இந்நூலுக்கு "தில்லி" பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவராக இருந்த "சாலை இளந்திரையன்" அவர்கள் ஒரு அணிந்துரையினை வழங்கியிருந்தார். அதில் மங்கிப் போன விளக்கைத் துலக்கியது போலவும், தூர்ந்து கிடந்த வாய்க்காலைப் புதுப்பித்தது போலவும், மக்களில் பெரும்பாலோர் மறந்து விட்ட இனிய கிறிஸ்து சமய இலக்கிய நூல்களின் சுவை நாதத்தை இந்நூலிலே எழுப்பிக் காட்டுகிறார் அன்பர் முத்தையா. எளிய இனிய நடை, ஏற்ற இடங்களில் ஒப்புமைப் பகுதிகள் இந்நூலின் சிறப்பிடத்தைப்

பெறுகின்றது எனத் தனது அணிந்துரையில் குறிப்பிடுகின்றார்.

" என்னையல்லாற் பக்தருனக்
கெண்ணிருந்த கோடிகளுண்
டுன்னையல்லா லெந்தனுக்கிங்
கோருதவி யார்" பரனே!

எனத் தனது இலக்கியச் செய்யுளின் இறைவனை இறைஞ்சி "என்னிலும் சிறந்த பக்தர்கள் உனக்குக் கோடிக் கணக்கிலுண்டு. ஆனால் எனக்கு உன்னைத் தவிர வேறு தஞ்சமில்லையே. ஆதலால் உனக்கு நான் தேவையில்லை. ஆனால் எனக்கு நீ தேவை. உனக்குக் கோடி அன்பர் உண்டு . எனக்கு நீர் ஒருவரே உண்டு. ஆதலால் என்னைக் கைவிடாதே" எனக் கேட்பது கற்போர் உள்ளத்தை உருக வைப்பதாக இருக்கின்றது.

"தெருக்கள் தூரிகைகள் ஆகட்டும்
மைதானங்கள் மைப்பலகைகள் ஆகட்டும்"

என்று பாடினான் ரஷ்யக் கவிஞன் மாயகோல்ஸ்கி.

கலையும் இலக்கியமும் மக்கள் சொத்துக்கள். மாபெரும் மக்கள் சமுதாயத்தில் இவை ஆழமாய் வேர் கொண்டுள்ளன. இந்தக் கலையும் இலக்கியமும் சாதாரண மக்களின் உணர்ச்சி எழுச்சிகளைச் சிந்தனை ஓட்டங்களை, மன உறுதிகளை ஒன்றாக்கி அவர்களை வாழ்வில் உயர்த்த வேண்டும். பொதுவுடமைத் தத்துவத்தில் கலைக்கும் இலக்கியத்திற்கும் உரிய இடம் இது தான். இதனை விடிவெள்ளி அவர்கள் ஒப்பு நோக்காகக் கொண்டு "தமிழ் அறிவு" என்னும் நூலினை உயர்நிலை வகுப்பு ஆசிரியர்களும், மாணவர்களும் பெரிதும் பயன்படும் படி வெளியிட்டார். இந்தத் தமிழ் அறிவு சொல்லறிவு, சொற்றொடரறிவு, கட்டுரையறிவு, செய்யுளறிவு, சுருக்கியெழுதுமறிவு, நூலறிவு, மொழிபெயர்ப்பு அறிவு, முத்துக் குவியல், மாதிரி வினாப்பத்திரங்களையும் உள்ளுறையாகக் கொண்டமைந்தது.

1955ம் ஆண்டளவில் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்த பேரறிஞர் வண.எக்ஸ்.எஸ் தனிநாயக

அடிகளார் "தமிழ் அறிவு"க்குக் கொடுத்த வாழ்த்துரையில் "குடியாட்சியில் மக்கள் இன்புற வாழ வேண்டுமாயின் அவர் தம் மொழியைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் பயின்று, தம் கருத்துக்களைப் பிழையின்றி பேசவும், எழுதவும் பயின்று, தம் கருத்துக்களைப் பிழையின்றி வெளிப்படுத்தல் வேண்டும். இலங்கையின் புதுக்கல்வித் திட்டத்தையும் அரசியலமைப்பையும் கருதி, சில துணை நூல்கள் வெளிவந்துள்ளன. அவ்வகையில் ஆசிரியர் முத்தையா தொகுத்துள்ள தமிழ் அறிவு மாணவர்க்குப் பயனளிக்கக் கூடியது" எனக் கூறி மகிழ்வுடன் வரவேற்று, இத் தொண்டினை வாழ்த்துகின்றார்.

யாழ்ப்பாணம் இளவாலை ஆசிரியக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், கொழும்பு சஞ்சூசையப்பர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளருமாகிய பண்டிதர் வி.ஏ. ஜோன்பிள்ளை அவர்கள் தமிழ் அறிவு என்ற நூலுக்களித்த வியப்புரையில்,

" மொழிப் பயிற்சி கற்றற்கேற்ற, புத்தம் புதிய முறைகளைத் தழுவிய நூல் ஒன்று வெளிவர வேண்டுமென்று பலரும் எதிர்பார்த்திருந்தனர்.

"தமிழ் அறிவு" எனும் இச்சீரிய நூல் இதனைப் பூர்த்தி செய்திருப்பது கண்டு பெரிதும் உவகை எய்துகின்றேன். மாணவ உலகிற்கு நற்றிசை மலர்ந்துள்ளது என்பதை நிச்சயிப்பது இந்நூல். எனவே இச்சீரிய நூலினை ஆக்கி உதவிய பேராசிரியர் க.பே.முத்தையா அவர்கள் ஆழ்ந்த அறிவும், ஆற்றலும், அனுபவமும் வாய்ந்தவர் என்பது இந்நூலகத்துப் புலனாகும் எனத் தெரிவித்திருந்தார்.

பலரின் பாராட்டுதல்களையும் பெற்றதாக இளையதம்பி ஆசிரியரினால் தமிழ் அறிவு மீளவும் பதிப்பிக்கப்பட்டது. விடிவெள்ளி அவர்களின் தமிழ் அறிவு வெளியீட்டு முயற்சியில் அவருடைய நண்பரான யாழ்.ஜெயத்தின் பங்கு அளவிறந்தன.

" தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்ற மகுட சிந்தைனையாகத் தமிழ் அறிவு வெளிவந்தது.

"கிறிஸ்தவக் கம்பர் எச்.ஏ கிருஷ்ணபிள்ளை" அவர்களின் வரலாற்றினை உதயதாரகையில் எழுதியிருந்தார். அதிலே இங்கிலிஸ் பாஷையைக் கற்றும் அநேகர் தமிழ்ச்சுய பாஷையானதால் அது தானே வரத்தக்கது. பிரயாசப்பட்டுப் படிக்க வேண்டியதில்லை என்ற எண்ணத்தினாலும் படித்தாலும் தற்காலத்தில் பயனில்லை என்றதினாலும் தமிழ் இலக்கியத்தைக் கற்காமல் விடும் நிலை கவலைக்குரியதாக இருக்கின்றது என்பதனை எடுத்துக் கூறி அவர் வருந்துவதைக் காணலாம்.

விடிவெள்ளி அவர்கள் தனது "உடுத்துறைச் சபையின் விசித்திரச் சரிதம்" என்ற வரலாற்றுச் சரித்திரங்களைக் கூறும் திருச்சபைக் கைநூல் ஏடு ஒன்றை எழுதியிருந்தார். அந்நூல் ஒரு வரலாற்றுச் சான்றாக இன்றைய நாட்களில் மிளிர்கின்றது. உடுத்துறையையும், அதன் அண்மையிலுள்ள கிராமங்களின் பண்டைய கால வரலாற்றையும் இந்த நூல் தெளிவுபடுத்துகின்றது. இங்கிலாந்து மிஷனரிமார்களான " சிமன்ஸ்" "கிறிவித்", "பிக்வேர்ட்", "கோஸ்வி", "கனன்" போன்றவர்களின் பணியினையும் அது எடுத்துக்கூறுகின்றது. இலகு தமிழில் பலரும் அறியும் வண்ணம் மிஷனரிமார்களுக்கும், சுதேச மக்களுக்கும் இடையில் நடந்த பல சம்பவங்களை அழகாகச் சுட்டிக்காட்டுகின்றார். படிக்க விரும்பிய ஒரு ஏழைச் சிறுவனைப் படிப்பிப்பதற்காக அழைத்துப் போகும் போது அப்பிள்ளையின் தாயார் பின்வருமாறு ஏசித் திட்டிய சம்பவத்தைக் கூறுகின்றார். "ஐயோ என் மகனை அறியாமல் எங்கோ தொலைத்து விடப் போகிறார்களே, போகிறார்களே" என்று புலம்பிய சம்பவத்தைச் சித்தரிப்பதிலிருப்பது அச்சமூகத்தின் பழமைத் தன்மையினை நாம் காணலாம்.

"முத்தமிழ் நாட்டுக்கு மானம் பெரிதன்றி
மூச்சுப் பெரிதில்லை"

எனும் ஒப்புயர்வற்ற கொள்கையினை நிலைநாட்ட எழுந்த காவியம் பாரதிதாசனின் " தமிழிச்சியின் கத்தி " ஆகும். அதனைப் போன்றே ஒரு மொழியின் வெறியினை இலங்கை நாட்டில் எடுத்துரைக்க எழுந்தது. விடிவெள்ளியின் "தமிழ் மரபு" ஆகும். தமிழ் மரபின் இலக்கியச் சாரலில் பல சிறப்பான உவமை முத்துக்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

"உமிழ் நெருப்பின் அணுவெறியில் உலகமெலாம் அவலமுறும்
ஒரு மொழியின் வெறியிலெம திலங்கை வாடும்
தமிழ் மரபின் வெறியொன்று அணுவெறிகள், மொழி வெறிகள்
தமை மிஞ்சித் தலைவிரித்து நெருப்பாய் நின்று
அமிழ்தனைய தமிழ் மொழிக்கும் தமிழுலகின் கலைஞருக்கும்
அவமான நிலையினின்று தருதலாலே
தமிழ் மரபின் தகைமைகளும் அதன் நலனும் கெடுதிகளும்
சமர்நிலையும் கொடுமைகளும் சாற்றலுற்றேன் "

தமிழ் மொழியினையே தன் உயிராகக் கருதி, அதற்கு எதிர்ப்பும் அழிவும் எத்திசையிலிருந்தும், எவரிடமிருந்து வந்தாலும் அதனை எந்த நிலைக்குச் சென்றாவது எதிர்த்துத் தகர்த்திட வேண்டும் என்பது தான் கவிஞர் அவர்களின் சிந்தனையாக இருந்தது. தமிழ்த் தொண்டே தன் தாயின் தொண்டென்று பணி புரிந்தவர் எமது கவிஞர் அவர்கள்.

" உயர்த்து தமிழ் இலக்கியத்தை உயிர்கொடுத்தும்
வளர்ப்போமென்றொருகாலில் நிற்பவர்கட் கிந்த நாளில்
வயிற்றெரிச்சல் தலைப்பாரம் கண் மறைதல் மதிமயக்கம்
வாயலட்டல் என்றபுதுக் கலைநோய் தோன்றி
பயித்தியமாய் முடிகிறது பரிதாபம் நோயகற்றப்
பல மருந்துப் பத்தியமும் கண்டாராய்ந்து
துயர்துடைக்கத் தமிழியக்க விழாச்சபைகள் அறிஞர் குழாம்
தொண்டு செய்க தமிழ்த் தெய்வம் கருணை செய்யும் "

தமிழ் இலக்கியத்தை உயிர் கொடுத்து வளர்க்க வேண்டியது தமிழ் சான்றோர்களின் இன்றைய நிலையினை நயம்படச் சித்தரிக்கின்றார்.

"அமைச்சியல்" பற்றிக் கூற வருகின்ற விடிவெள்ளி அவர்கள் அமைச்சின் இயல்புகளைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைக்கின்றது. குற்றம், இயல்பு, உயர்வு, குற்றநெறி, மாண்பு போன்ற அணிகலன்களைப் பலவாறு ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

" மந்திரியும் மந்திரியும் மார்தட்டி மோதுதலே
விந்தை யமைச்சின் விதம் "

கண்ணை விரிதல், கரடிவிடல், கைநீட்டல்
உன்னும் அமைச்சர்க் குயர்வு
இன்றொன்று கூறி இதை மறுநாளே மறுத்தல்
என்றும் அமைச்சர்க் கியல்பு
தங்களிடம் வாழ்ந்து தழைக்கப் பிற இனத்தை
மங்கச் செயலமைச்சின் மாண்பு

இவ்வாறு இரு சொல்லடிகளைக் கொண்டு அனைவரும் ரசித்துச் சுவைக்கும் வண்ணம் புலப்படுத்துகின்றார்.

"குடிமக்கள் சொன்னபடி, குடி வாழ்வு மேன்மையுறக், குடிமை நீதி கடியொன்றில் எழுந்தது பார்" என்று ரஷ்யப் புரட்சியைப் பாடிய பாமர மக்களால் இன்றும் என்றும் மதிக்கப்படும் மகாகவிஞன். "புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் பொதுவுடமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம், என்று குரலெடுத்துக் காவிய புதுவைக்குயில் பாரதிதாசன் இவ்வாறு வாழையடி வாழையாக வந்த கவிஞர் எல்லாம் பாருலகில் கண்டவற்றை இலக்கியமாகவும், கவிதையாகவும், படைத்தார்கள். முற்கால வாழ்வினைப் பற்றிக் கூற வருகின்ற விடிவெள்ளி அவர்கள்.

" சந்திரனைச் சூரியனைச் சாற்றுகின்ற கங்களையும்
விந்தையுறு விஞ்ஞானத்தாலே இயற்றுகிறீர்
மந்திக் குரங்கின் வழி வந்த மானிடர்கள்!
சிந்தை திருத்தச் சிறிது பணி செய்யீரோ?

என வினா எழுப்பி

" வலவன்ஏ வாத ஒரு வானூர்தி செய்தீரே
உலகில் மனுக்குலத்தோர் உள்ளம் சிதைந்தழிந்து
கலகம் விளைத்தந்தக் கற்கால வாழ்வு செயும்
நிலைபரத்தைக் கண்டுகண்ணின் நீர் வடிக்க மாட்டீரோ

என்று வானம்பாடியாகிய விடிவெள்ளி மனம் வெதும்பிப் பாடுகின்றார். அந்த வானம்பாடி ஒரு வற்றாத கவியூற்று, கொடுமை கண்டு குமுறும் எரிமலை, அன்புக்குக் குழையும் தென்றல், நட்புக்கு மணக்கும் முல்லை.

"துயரங்களைத் தணித்து, மனிதர்களின் எண்ணத்தை உயர்த்துவது தான் கவிதையின் மகத்தான குறிக்கோள் " என்று "கீட்ஸ்" என்னும் மகாகவிஞன் கூறினான். மொழி உணர்வையும் இனப் பெருமையையும் மக்களிடம் வளர்ப்பதை இன்றியமையாத ஒரு கடமையாகக் கருதிப் பல இலக்கியங்கள் வெளிவந்தன. அவ்வகையில் நாகரிகம் என்ற பெயரில் அழிந்து போகின்ற கலாச்சாரத்தைக் கட்டியெழுப்பும் முகமாக "எது நாகரிகம்" என்ற ஒரு இலக்கியத்தில் இன்றைய நாட்களில் எமது இளைய தலைமுறையினரிடம் காணப்படுகின்றது எது என்பதை வெளிச்சமாக்குகின்றார்.

" பாலாவி யாடை தரித்துடல் காட்டல் பருத்த விழி
வேலால் எறிதல் வயிற்றி லொருசாண் வெளிவிடுதல்
நாலாறு பேரில் ஒருவர்செய் காதல் நடம்புரிதல்
மேலான நன்னாக ரிகமேன் றேதுமிம் மேதினியே"

என்ற பாடலின் மூலம் பெண்களின் ஆடையலங்காரத்தைச் சாடுகின்றார்.

" கிட்லர்" , இஸ்டலின், " சேம்பலின்" மீசை கிரை விட்டு
கட்டும் சிறுமணிக் கூடு முழங்கையி லேபொருத்தி
சட்டை புதுவித மாக அணிந்து தலைசுருட்டும்
பட்டிகள் நாகரிகத்தினைப் போற்றுமிப் பாருலகே
சந்தியின் மதவு தோறும் தாமிருந் தொருவா லில்லா
மந்திக ளாகிச் செல்லும் மங்கையர் நடுங்க வாயின்
தந்தமெல்லாமி ழித்துப் தமிழ்ப் பண்பைக் கொல்லுகின்ற
மைந்தர்கள் வாழ்வே இன்று மனிநா கரிக மென்பார்.

இளைய ஆடவரின் நாகரிகம் எவற்றில் தங்கியிருக்கிறது என்பதற்கு மேல் வந்த வரிகள் புலப்படுத்துகின்றது.

" இந்திய நாகரிகம்
அதன் நிலை ஆய்ந்தி டாது
மன்னிய தமிழ்ப்பண்போடு

மயங்கிடக் கலந்து சாம்பார்
என்றுமோர் கலப்பு வாழ்வில்
இனிமை கண் டருந்தி மாயும்
இன்னிலை ஒழிய வேண்டும்
எனமுர சறைவோம் வாரீர்!

தமிழ்ப் பண்பாடுடன் சார்ந்த வாழ்வினை எதிர்பார்த்துக் கலப்புச்சாம்பார் வாழ்வினைக் கண்டிக்கின்றார்.

1962 ம் ஆண்டளவில் வேலணையில் ஒரு திருக்குறள் மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மாநாட்டை நடப்பித்த பெருமை விடிவெள்ளி அவர்களையே சாரும். திருக்குறளைத் தமிழ் கூறும் உலகின் பல பாகங்களிலிருந்தும் பலரும் வளர்த்து வருகின்றார்கள். இவ்விழாவில் சொற்பொழிவுகள், கருத்தரங்கம், கவியரங்கம், இசையரங்கம், நாடக அரங்கம் எனும் பல துறைகளில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ் விழாவில் டெல்லி பேராசிரியரான கனகசவுந்தரி இளந்திரையனும், திருச்சிப் பேராசிரியர் ஐயன் பெருமாள் கோனார் அவர்களும், ஈழத்துக் கவிஞர்களும் அறிஞர்களும் கலந்து கொண்டு இதனைத் தமிழமுதம் செழிக்கும் அற்புத விழாவாக அமைத்து விட்டனர். அறிவுடமையோ, பொருளுடைமையோ சிறந்ததெனக் கருத்தரங்கமொன்று நிகழ்ந்தது. நகைச்சுவையும், கருத்து மோதலும், குறள் வளமும், அங்கே பாய்ந்து பெருகின. கவிஞர்களான முருகையன், அல்வாயூர் செல்லையா, அம்பி யாழ்ப்பாணன் மகாகவி அ.ந.கந்தசாமி, சாலை இளந்திரையன் ஆகியோர் செந்தமிழிலே தேனைக் குழைத்துக் கவிதை மாரி மொழிந்தனர். இதற்குத் தலைமை வகித்த கவிஞர் நாவற்குளியூர் நடராசன் அவர்கள் தமது உரையில் அறிமுகவுரையையும் கவிதையாகவே அமைத்து அள்ளிப் பொழிந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். அதன் பின் பேராசிரியர் சின்னத்தம்பி , பண்டிதர் இரத்தினம் போன்றவர்களின் உரைகளும், பரிசுகளும் வழங்கப்பட்டது. இவ்விழாவானது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த அன்றைய தமிழ் மறைப்பரப்பாளர்கள் அனைவரையும் கூட்டிச் சேர்ப்பதாக இருந்தது.

இலக்கிய உலகில் அவருடைய கட்டுரைகளுக்கும், பாடல்களுக்கும் இருக்கின்ற இடத்தினைப் போன்றே சிறுகதைக்கென்றும் அவருக்கு ஒரு தனித்துவமான இடம் உதயதாரகையில் இருந்தது. "பாலர்நேசர்" "திருச்சபைத் தீபிகை" போன்றவற்றில் அவை வெளிவரத் தொடங்கிற்று. அவ்வகையில் உதயதாரகையில் "மிருகம் மனுஷனானது" என்ற தலைப்பிலான ஒரு சிறுகதையை எழுதியிருந்தார். ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் மதுபானத்தின் வரவினால் நடக்கின்ற பிரச்சினையினைச் சுட்டிக் காட்டுவதாகவும், ஒரு நண்பனின் உதவியினால் குடும்பத் தலைவன் மனுஷனாகும் சம்பவத்தைச் சுட்டிக் காட்டிச் சமூக விழிப்புணர்வினைக் கொண்டு வருகின்றார்.

கிறிஸ்துவுடன் ஒட்டாதவன் எவ்வாறு குடும்பத்துடனும் கந்தோர்களிலும், சமூகத்துடனும் ஐக்கியப்படுவான்? எனவே கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் போது எமது வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மாறி விடுகின்றது.

கிறிஸ்தவ சாகியத்தில் பரந்த மனப்பான்மையும், தயாளசிந்தையும் ஏற்பட வேண்டும் என்பதற்காக அவர் புனைந்த கதை " வசந்தி" என்ற ஒரு சிறுபிள்ளையைக் கதைக்குரிய தலைவியாகக் கொண்டு " ஐசுவரியவான், லாசருவினுடைய சம்பவத்தைக் கூற முற்படுகின்றார். பிசாசின் பிள்ளைகள் யார்? கடவுளின் பிள்ளைகள் யார்? என்று போராட்டத்தைச் சித்தரிக்கின்றார். பட்டுடைகளும், அணிகலன்களும், எம்மை விண்ணரசு வாழ்வதற்குக் கொண்டு போகாது. மாறாக நரக வாழ்விற்கே கொண்டு போகும் என்பதை வசந்தியின் வாழ்க்கை மூலம் விளக்குகின்றார்.

இலக்கியம் பற்றிய எவ்வித பிரக்ஞையும் சிந்தனையும் சித்தாந்தமும் இன்றியிருந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து இலக்கியத்தைப் பற்றி சிந்திக்கவும், கருத்துக்களைப் பத்திரிகை வாயிலாகத் தவள விடவும், ஏனைய எழுத்தாளர்களை எழுத்துலகில் கால் பதிக்கவும் விடிவெள்ளி அவர்களின் காலப்பகுதி ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் முக்கிய கட்டமாகும்.

# உதயமாகும் விடிவெள்ளியின் சமூகப்பயணம்

தியாக மனப்பான்மையுடன் கூடிய அர்ப்பணிப்புணர்வு, நேர்மை மிகுந்த நெஞ்சம், நயத்தகு நாகரீகம் பேணும் நன்நடத்தைப் பண்புகள் யாவும் ஒருங்கே இயல்பாக அமையப் பெற்றவராலேயே பொறுமையாகவும் தூய்மையாகவும் சமுதாயப்பணியை நிறைவேற்ற முடியும். அத்தகைய சமுதாயப் பணியாளர்கள் மிகச்சிலரிலே விடிவெள்ளி க.பே முத்தையாவும் ஒருவர். கல்லாயும் சொல்லாயும் காட்டிக்கொடுப்புக்கள், கட்டுக்கதைகள் நிறைந்த மனித மந்தைக் கூட்டத்தினிடையே சமுதாயப்பணியைச் செவ்வனே செய்வதென்பது தற்கொலைக்குச் சமம். அதனால் தான் கவியரசர் கண்ணதாசர்

"போற்றுபவர் போற்றட்டும் புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர் வரினும் நில்லேன்"

என்ற சமுதாயப்பணியின் இலட்சியவுறுதியைக் கவிதையாகப் பாடியுள்ளார். இந்த அளவுக்கு சமுதாயப்பணி என்பது சமுதாயத்தைச் செதுக்கித், சீர்த்திருத்தி, உயர்த்திவிடுகின்ற ஒப்பில்லாப்பணியாகும். அதை நிறைவேற்ற வருகின்றவர்களுக்கு மிகுந்த மனவுறுதியும், தளராத தன்னம்பிக்கையும் இயல்பாகவே இருக்க வேண்டும். விடிவெள்ளி முத்தையாவுக்கு அவையாவுமே நிறைவாகவும் இயல்பாகவும் இருந்தது. அவரின் சமுதாயப்பணிகள் பெரும்பாலும் கிறிஸ்தவ சிந்தனைகள் சார்ந்ததாகவும் பரிசுத்த வேதாகமத்தைத் தழுவியதாகவும் அமைந்தன. பரிசுத்த விவாக தத்துவங்கள் என்கிற பெருந்தலைப்பின் கீழ்

விலையேறப்பட்ட "பெண் மூகூர்த்தம்" ஆகிய சிறுதலைப்புக்கள் இட்டு இவர் எழுதிய கட்டுரை பின்வருமாறு.

விலையேற்றப் பெற்ற பெண் என்ற தலைப்பிலே விவாகத்தின் போது ஆலயத்துக்கு முதல் மணமகன் தோழனுடன் வருகின்றார். அதன் பின் மணமகள் தந்தையுடன் ஆலயத்திற்குள் பிரவேசிக்கின்றாள். மணமகன் வரும் போது சபையார் உட்கார்ந்தபடி இருக்கின்றனர். மணமகள் வரும் போது மணி அடித்தவுடன் சபையார் எழுந்து நின்று மரியாதை செலுத்துகின்றனர். இதைப்பற்றி நண்பர் ஒருவரின் கருத்து என்னவென்றால் மணமகள் வரும்போது எழும்புவதற்கு மரியாதை என்றல்ல காரணம். அப்பெண் மிகவும் விலையேறப் பெற்றவள். "முத்துக்களை பார்க்கிலும் அவள் விலையேற்றப்பட்டவள் " என்று வேதமும் கூறுகின்றதே. அதாவது அவள் நாற்பதாயிரம், ஐம்பதியாயிரம் பெறுமதியுள்ளவன், சீதனமாக அவளுக்கு விலை பேசப்பட்ட போது அவரின் விலை அத்தனை அதிகமாயமைகின்றது. அதனால் தான் அவள் வரும் போது எழுந்து நிற்பது. அவளின் விலை ஒரு லட்சம், இரண்டு லட்சமானால் சபையார் எழுந்து சும்மா நிற்பதல்ல வாங்குகளின் மேல் ஏறி நிற்க வேண்டு என்ற கருத்துடன் அவர் எழுதுகின்றார். ஆனால் அவ் விலையைக் கொடுத்து மணமகனை பெண்ணின் தந்தையால் விலைக்கு வாங்குகின்றார் என்பது என் கருத்து. ஆகவே இத்தனை பெருந்தொகை காசு வாங்கிய மணமகள் வரும் போது அனுதாபம் காரணமாக அதாவது பெருந்தொகை சீதனம் கொடுத்து அழிந்து போகும் இந்த ஒரு மனு உடலை வாங்கிய அவனது வியாபார நாட்டத்தை நினைத்து, அவளது புத்தியீனத்திற்காக எழுந்து நிற்பது தான் சரியான காரணம் என எண்ணுகின்றேன் யான்" என சமூக சிந்தனையை கிளறும் வண்ணம் எழுதினார்.

மூகூர்த்தம் என்ற பகுதியில் அன்றைய நாள் தொடக்கம் இன்றுவரை கிறிஸ்தவ சமூகத்தில் காணப்படும் பல பிற்போக்கான பழக்கங்களைக் கண்டிக்கின்றார். நமது ஆலயங்களிலே கிறிஸ்தவ கல்யாணங்கள் பல நடக்கும் போது சைவ மணங்களும் பல நிகழ்கின்றன. சாதாரணமாக இது நடக்கும் ஒரு நல்ல விடயம். இது மகிழ்ச்சி தரும் செய்தியே. இந்த மூகூர்த்த

நேரங்கள் இரவு பதினொரு மணி, பகல் ஒரு மணியென்று குறிக்கப்பட்டிருந்தாலும் குருமார் சபையாருடைய வசதிக்காக இந்த இரக்கமுள்ள நல்ல கிறிஸ்தவர்கள் அந்த நள்ளிரவிலும், நண்பகலிலும் கைபிடிக்கும் படி வற்புறுத்தி ஒற்றைக் காலில் நிற்காமல் அந்த நாளிலேயே காலையிலும், மாலையிலும் பரிசுத்த விவாகங்களை வைப்பது பெரிய தியாகம் எனக் கூறலாம்.

ஒரு நண்பர் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவத்தைக் கூறினார். ஒரு முரட்டு குருவானவர் தமது பஞ்சாங்கம் பார்த்து, நாள் பார்த்து மணம் முடித்தாராம். அதாவது ஒரு பஞ்சாங்கத்தை விலைக்கு வாங்கி வந்து அதில் அட்டமியும், மரணயோகமும் சேர்கின்ற நாளில் மணம் செய்து வைத்து மூகூர்த்தமும் பார்ப்பது மடமை என்று நிரூபித்தாராம். இதை அந்த நண்பர் சொல்லி அவர்கள் நல்ல சுகபெலமாக இருக்கின்றார்கள். இக்குடும்பம் சென்ற முப்பது வருடங்களாக (HONEY MOON) தேன் மதியில் இருக்கின்றார்கள். பிள்ளைகள் மிகவும் முன்னேற்றமாய் இருக்கின்றார்கள். திருச்சபையின் தூணாக இருக்கின்ற குடும்பம் என்று அவர் சொன்ன போது நான் அக்குடும்பத்தை இன்னார் என்று கண்டு பிடித்து விட்டேன். அட்டமி மரணத்திலே செய்தபடியினால் பல வருடங்களுக்குப் பின்னால் மாஸ்டருக்கு (புருஷனுக்கு) ஒருமுறை வயிற்றுளைவு வந்ததையும், மனைவிக்கு மூன்று கிழமை நெருப்புக்காய்ச்சல் வந்ததையும் நீர் மறைக்க முடியுமா என்று சவால் விட்டேன் நான். நண்பன் என் தர்க்க மூளைக்கும், கேள்வியம்புக்கும் நேர் நிற்கமாட்டாமல் தோற்று மூகூர்த்தம் பார்ப்பது குடும்ப சுக வாழ்வுக்கு மிக அவசியம் தானென்று ஒத்துக்கொண்டு சென்றார். ஆனால் கூட இருந்த இன்னொரு நண்பன் இன்னொரு எதிர்க்கணை விட்டு என்னை விழுத்தப்பார்த்தான். அவர் கேட்டார் "நான் மூகூர்த்தம் பார்த்துக் கைபிடித்த பல பரிசுத்த விவாகங்கள் பல குழம்பி குடும்பப் பிரிவினையில் சிதறியிருக்கே"? என்றார். விட்டேனா நான்? என்னையா அவர் தோற்கடிப்பார்? அந்த மூகூர்த்த நேரங்களில் மத்தியானம் பதினொருமணி இரண்டு நிமிடம் ஒன்பது செக்கன் என்று போடப்பட்டிருக்கச் சரியாக அந்த மணி, நிமிட, செக்கனில் பரிசுத்த விவாகத்தை நிறைவேற்றாமல் மாலை நான்கு மணிக்கு வைத்தால் எப்படியையா குடும்பம் ஒற்றுமை வரும்? என்று

போட்டேன் ஒரு போடு. அத்துடன் அவரது வாயையும் அடைத்தேன்.

இந்தச் சமுதாயச் சீர்திருத்தக் கட்டுரையிலே "விடிவெள்ளி" முத்தையாவின் சீதன எதிர்ப்பு மனப்பான்மையும், பஞ்சாங்கம் பார்த்தல், சகுனம் பார்த்தல் போன்ற மூட நம்பிக்கைகளுக்கு எதிரான போராட்டத் தெளிவும் நன்கு புலப்படுகின்றன. அடிப்படையில் பிறபடுத்தப்பட்ட சாதி இந்துவான அவர் கிறிஸ்தவத்தைத் தழுவியபின், யாழ்ப்பாணச் சமுதாயத்தினுள் ஆழமாக வேரூன்றி, அகலக் கிளைவிரிந்த சனாதனச் சடங்குகள், சம்பிராதாயங்கள், அவை சார்ந்த மூடநம்பிக்கைகள் யாவற்றுக்கும் கிறிஸ்தவ சிந்தனைகளின் வழியில் தீர்வு காணப்பெரிதும் முயற்சி செய்துள்ளார். அதற்கான வாத எதிர்வாதக் கருத்துக்களடங்களாகவே அவரின் கட்டுரைத் தொடர்கள் அமைந்துள்ளன.

எந்த ஒரு சிக்கலான விடயத்தையும் சமன் செய்து சீர்தூக்கி ஆராய்ந்து தீர்வு சொல்லும் "நுண்மான் நுழைபுலம்", மிகுந்த ஒரு சில மாமனிதர்களில் " விடிவெள்ளி" முத்தையாவும் ஒருவரென்பதை அவரின் கட்டுரைத் தொடர்கள் தெளிவாகக் காட்டுகின்றது. ஓர் உயர்ந்த வழக்குரைஞருக்கே உரிய " வாதாடுந்திறன்" வாய்க்கப் பெற்றவராக அவர் திகழ்ந்தார் என்பதை முதற்பிள்ளை என்ற தலைப்பிலான அவருடைய கட்டுரையில் கூறுகின்றார். அன்றைய நாட்களில் பிள்ளைகளின் குணவியல்புகளைப் பற்றிய ஒரு சில கண்ணோட்டம் இருந்தது. விடிவெள்ளியவர்கள் இப்பிள்ளைகளின் குணவியல்புகளுக்கு எது காரணம் என்பதை இங்கே சித்திரிக்கின்றார்.

"மூத்த பிள்ளை மோட்டுப்பிள்ளை" என்ற பழமொழி உண்டு. இது பலருடைய குடும்பத்திலே ஒத்து வருகிறது போலத் தெரிகிறது. ஆனால் சென்ற காலங்களை விட இக்காலமே மூத்த பிள்ளைகள் அதிக முரடர்களாய் வருகின்றார்கள் என்று ஒரு ஆராய்ச்சி குறிப்புக் கூறுகின்றது. சென்ற காலங்களில் மணமக்கள் தம் பெற்றோரின் அன்புக்குள், அரவணைப்புக்குள் மணம் முடித்த நாட்களைக் கழிப்பார்கள். செபதபங்களும், ஆசீர்வாதங்களும் தெய்வ சிந்தனைகளும், வேதவாசிப்புகளும், அந்நாட்களில் உருவாக்கப்படும். ஆனால் இன்று மணமக்கள் திடீரென்று மறைந்து விடுகின்றார்கள்.

காடுமேடுகள், கரடுமுரடுகள் தேடிச்சென்று, தேன்மதி நகர்கின்றார்களாம். விவாக நிச்சயார்த்தம் முடிந்த நாலைந்து மாதமும் அவர்கள் மணமக்கள் போல அல்லது அதற்கு மேலாகப் பரிசுத்த விவாகத்தை ருசித்து திரிகின்ற வழக்கத்தைச் சபை ஐக்கியப்படுத்தி வருகிறது. ஆகவே மணம் முடிக்கும் போது இவர்கள் பழசாய்ப்போன புதிய மணமக்களாக சந்திக்கின்றார்கள் எனக் கூறி வந்த விடிவெள்ளியவர்கள் தனது எண்ணத்தை முன் வைக்கின்றார். அப்படியானால் இவர்கள் ஏன் அவசரப்பட்டு காட்டுக்குள்ளே பேய், பிசாசுகளுடன் சேர்ந்து வாழ ஓடிப்போகின்றார்கள்? என்பது என் சிந்தனையில் பன்முறையும் விளங்காத நொடியாக இருந்து வருகின்றது. இவ்வாறு காய்ந்த மாடு கம்பிலே விழுந்த மாதிரி ஊரை வெறுத்து, உற்றாரை வெறுத்து இந்த பழசாய்ப்போன புதிய மனமக்கள் ஓடவேண்டியதேனோ? இந்த அவசரமே ஓட்டமே முதற்பிள்ளையை அவசரக் குடுக்கையாக்கி, காய்ந்த மாடாக, மேடாக முரடாக ஆக்கி விடுகின்றதோ என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து தீர்க்க வேண்டியது.

தேன்மதியில் உருவாகும் குழந்தை தேன்மதியாக இனிக்காமல் வேப்பெண்ணையாக, விளக்கெண்ணையாக விளங்குவது ஏனோ? ஆனால், முதற்பிள்ளை தேனாக இருப்பது உண்டே என்று கூறுவோர்க்கு என்ன விடை கூறலாம்? சிலர்க்கு தேன்மதி நன்மையினையும், சிலருக்குத் தீமையினையும் தருகின்றதைத்தான் கூற வேண்டும் போலும்! நாம் சிந்தித்துத் தெளிவோமா, என " முதற்பிள்ளை" எனும் கட்டுரைத்தொடர் தொடர்ந்து செல்கின்றது.

" இனம் வாழ தினம் அயராப் பணி புரிவோம்" என்ற கலைஞரின் கருத்துக்கமையத் தனது செய்கையினால் அவற்றைச் செய்து காட்டியவர் எமது விடிவெள்ளி அவர்கள். நவஜீவனக் குடும்பத்தாருடன் அவர் கொண்ட உறவும், பணியும் மிகவும் விசாலமானதும், காத்திரத்தன்மையும் கொண்டதாகும். வண.எ.சி. தம்பிராஜா போதகருடன் சேர்ந்து பரந்தனில் உள்ள முரசுமோட்டை எனும் ஒரு கிராமத்தின் ஒரு தொண்டர் ஸ்தாபனமாகவும், கிறிஸ்தவ மறை பரப்பும் நிலையமாகவும் அடைக்கலம் இழந்து சமூகத்தில் வாழும் அனைவரையும் கூட்டிச் சேர்க்கும்

இல்லமாகவும் இது இன்றளவும் இயங்கி வருகின்றது. அதன் ஆரம்பகால உறுப்பினர்களாகவும், செயற்குழுவினராகவும் பின்வரும் குடும்பங்கள் காணப்பட்டன. திரு.திருமதி.ஆனந்தநாயகம், திரு.திருமதி. இரத்தினராஜா, திரு.திருமதி.வண.தம்பிராஜா, எலிசபெத் பேக்கர் அம்மையார், திரு.திருமதி.முத்தையா போன்ற "நவ" ஜீவன்கள் அங்கத்துவம் வகித்தனர். இன்று இந்நிறுவனம் விசாலமாக வளர்ந்து கிளை பரப்பி கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்றது. இலங்கையின் சகல பாகங்களிலிருந்தும் இந்நிறுவனத்தில் கல்வி பயிலவும், பயிற்சி பெறவும் பலரும் வந்து கொண்டே இருக்கின்றார்கள். ஆனால் தனது ஆரம்ப கால உறுப்பினர்களில் பலரையும் இழந்தும் இந்நிறுவனம் இயங்குகின்றது என்றால் ஆரம்ப நாட்களில் செய்யப்பட்ட பணியேயாகும். விடிவெள்ளியவர்களின் பிரயாசமும், பாடுகளும் அதிகமாக இருந்தது. எனவே தான் விடிவெள்ளியவர்களின் மறைவின் பின்னர் நவஜீவன குடும்பத்தார் அவரின் தொண்டினையும், பிரயாசத்தையும் நினைவு கூறும்வண்ணம் புனித சிற்பசாரி ஆலயத்திற்கு முன்பாக ஒரு அழகிய பூங்காவை செய்து அதில் வற்றாத நீர் ஊற்றைப் போன்ற ஒரு தொட்டியினைச் செய்து விடிவெள்ளியவர்களின் பெயரினைப் பதித்து வைத்துள்ளனர். சமூகத்தொண்டிற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

விடிவெள்ளியவர்களின் சமூகப் பணிகள் பலவாறு பல இடங்களிலும் விரிந்து காணப்பட்டது. உடுத்துறை, வத்திராயன், தாளையடி, மருதங்கேணி, ஆழியவளை போன்ற வடமராட்சிப்பகுதி எங்கேனும் காணப்பட்டது. இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக முத்தமிழ்ப்புலவர் ஜே.எஸ். ஆழ்வார்ப்பிள்ளையின் பாடலினை இங்கு குறிப்பிடுவது சிறந்ததாகும்.

"உடுத்துறை வத்தராயன் ஒரு தாளையடி யின்னம்
அடுத்துள மருதங்கேணி ஆழிய வளைகளெல்லாம்
தொடுத்துள நற்சமூக தொண்டினைப் புரிந்து நின்றாய்
விடுத்திங்கு வந்தமெம்மை விட்டுமே பிரிந்திட்டாயே"

1961ம் ஆண்டளவில் பாரதி பாஷ்ய பாடசாலையில் நடைபெற்ற யாழ்ப்பாண தமிழாசிரிய சங்க பொதுக்கூட்டத்தில் தமிழாசிரியர் சங்கத்தின் தலைவராக திரு.க.பே.முத்தையா தெரிவு செய்யப்பட்டிருந்தார். கிறிஸ்தவ தமிழாசிரியர் ஒருவர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டதை நாம் காணும் போதே அன்றைய கல்விச்சமூகமே விடிவெள்ளி அவர்களின் பணியினை அறிந்திருந்தது. அதனை விரும்பியும் இருந்ததை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

தனது வாழ் நாட்களில் விடிவெள்ளியவர்கள் பல அமைப்பினருடனும் சங்கங்களுடனும் சனசமூகத்தினருடனும், தன்னை இனம் காட்டிக் கொண்டது மாத்திரமன்றி அச் சமூகத்தொண்டு தாபனங்களில் உயர் பதவிகளில் இருந்தும் வந்திருக்கின்றார். அவற்றிலே இலங்கைத் தமிழ்ப் புத்தக வெளியீட்டுக்கழகத்தின் தலைவராகவும், இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் உப தலைவராகவும், இலங்கை கம்பன் கழகத்தில் பொருளாளராகவும், உதயதாரகை பத்திரிகையின் ஆசிரியராகவும், சமூகத் தொண்டன் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், வள்ளுவம் என்ற பெயரில் வெளிவந்த சனசமூக இதழின் ஆசிரியராகவும் கடமை புரிந்துள்ளார். விடிவெள்ளியவர்கள் பதவியை நாடிச்செல்லவில்லை. தொண்டினையே நாடினார்.

"பதவியொரு முள்மாலை! இலக்கியப்
பணி எனக்கு முல்லைச்சாரம்!
பதவியொரு நெடும் பள்ளம்! பொதுப்
பணி எனக்கு பொதிகைக் குன்றம்!
பணி புரியும் வாய்ப்புத் தான் பதவி!
பதவி, பரிசு, படாடோபம் எல்லாமே, ஊதிய
பணியினைப்போல் வெடித்துவிடும்
பண்பார்த்த தொண்டென்றே
வானைப் போல் நிலைத்து நிற்கும்"

என எண்ணி வாழ்ந்தவர்.

1960ம் ஆண்டிலிருந்து 1964ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரத்துடன் (நந்தி) சேர்ந்து பல சுகாதாரக் கருத்தரங்குகளில் பங்கு கொண்டார். அத்துடன் இவ் இருவரும் சேர்ந்து "நூல்" என்ற பெயருடன் ஒரு இதழினை வெளியிட்டனர். இந்த இதழானது ஆறு பக்கங்களைக் கொண்டதாக வெளிவந்தது. இவ்வாறு விடிவெள்ளியவர்களின் சமூகத் தொண்டினை கண்ணுற்ற அன்றைய யாழ் மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா அவர்கள் திரு. க. பே. முத்தையா (விடிவெள்ளி) திரு. சி டபிள்யு. அல்வினஸ் திரு.இராசையா போன்றோருக்கு சமாதான நீதவான் பட்டத்தைக் கொடுப்பதற்காக தகவல்களைத் திரட்டினார்கள். ஆனால் அதற்கு துரதிஷ்டவசமாக விடிவெள்ளி மறைந்து விட்டார் என நந்தி அவர்கள் மேற்கண்ட தகவல்களை பரிமாறினார்.

1952ம் ஆண்டில் "பாலர்நேசன்" என்ற பத்திரிகையை மெதடிஸ்த திருச்சபை, தென்னிந்திய திருச்சபை என மூன்று திருச்சபைகளும் ஒருமித்து நடத்தினார்கள். மெதடிஸ்த திருச்சபையில் இருந்து திரு. ஏ. டி சுப்பிரமணியமும், ஆங்கில திருச்சபையின் சார்பில் விடிவெள்ளி அவர்களும், தென்னிந்தியத் திருச்சபையின் சார்பில் வண. டி. ஆர் அம்பலவாணர் போதகரும் சேர்ந்து அதனை நடத்தி வந்தனர். பிற்பட்ட காலங்களில் அதற்கான போதிய வருமானம் இல்லாததினால் உதயதாரகை பத்திரிகையில் "பாலர்நேசன்" என்ற பெயருடன் சிறுவர்களுக்கான ஆக்கங்களை பிரசுரித்தார். நகைச்சுவை பொருந்திய கட்டுரைகள் மூலம் பல கிறிஸ்தவ உண்மைகளை எழுதுவார். "கழன்ற மோதிரம்" என்ற பெயரில் அவர் எழுதிய கட்டுரை பலருடைய பாராட்டுதல்களையும் அன்றைய நாட்களில் பெற்றது.

பதினான்கு ஆண்டுகளாக உதயதாரகையில் தனது ஆக்கங்களை எழுதத் தொடங்கினார் என வண. டி. ஆர் அம்பலவாணர் அவர்கள் கூறினார். சமூக சேவையிலிருந்து கொண்டு அவர் ஆரம்பித்த "சமூகத் தொண்டன்" பத்திரிகையானது அனைத்து சமூகத்தினருடைய வரவேற்பினையும் பெற்றது. இவருடைய சமூகத்தொண்டிற்குச் சிகரம் வைத்தாற்போல் இருப்பது அவருக்கு கிடைத்த தங்கப்பதக்கமும்,

வெள்ளிப்பதக்கமும் ஆகும். இப் பதக்கங்கள் அன்றைய பிரித்தானிய அரசாங்கத்தினால் மகாராணி அவர்களால் விடிவெள்ளிக்கு கொடுக்கப்பட்டது. இவை அனைத்தையும் அறிந்து தான் அவரின் மறைவின் பின் எமது மறைந்த பேராயர், அதி. வண. எஸ். குலேந்திரன் அவர்களிடம் ஒரு கார் சாரதி "நாங்கள் ஒரு நேருவை இழந்துவிட்டோம்........... என்று க.பே முத்தையா அவர்களைக் குறித்துக் கூறினாராம். யாழ்ப்பாணச் சமூகம் எமது விடிவெள்ளி அவர்களுக்கு கூறினாராம். எமது யாழ்ப்பாணச் சமூகம் எமது விடிவெள்ளி அவர்களுக்கு "நாவலர்" என்ற பட்டம் சூடக் காத்திருந்தது.

"நாவலர் என்ற பட்டம் நயந்தனித் திடுவான் வேண்டி
ஆவலாய்க் காத்திருந்தே மதற்கிடையினிலே தெய்வ
ஏவலர் நெருங்கியுன்னை யெடுத்துமே கொண்டு சென்றார்
தேவசித் தத்தை யார்தாம் திரித்திட வல்லாரத்தோ.............

என ஜே.எஸ். ஆழ்வார்ப்பிள்ளை பிரிவிரிக்க பாடலில் பாடுகின்றார். மேற்கூறப்பட்ட சம்பவங்களிலிருந்தும் பாடல்களிலிருந்தும் அவரின் சமூகத் தொண்டினை நாம் ஆழமாக அறிந்து கொள்ளலாம்.

உதயதாரகையின் கட்டுரைத் தொடர் முழுமையாக அவருடைய சமூகப்பணியை உறுதிப்படுத்துகின்றது. ஆனாலும் எந்தக் கட்டத்திலுமே அவரின் வாதாடும் திறன் உண்மைக்கு மாறானதாக இருந்ததேயில்லை.

"உண்மையின் பேர் தெய்வம் என்போம் – அன்றி
ஓதிடுந் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்
உண்மைகள் வேதங்கள் என்போம் – பிறிது
உள்ள மறைகள் கதையெனக் கண்டோம்"

மகாகவி பாரதியின் இந்தக் கவிதையின் இலக்கணமாக விடிவெள்ளி முத்தையாவின் சமுதாயப்பணிகள் நடைபெற்றன. பின்வரும் கட்டுரைத்தொடர் இதை மேலும் தெளிவுப்படுத்துகின்றதாக இருக்கின்றது. "செபப்புத்தகத்திலே திருத்தம்" என்ற அவருடைய கட்டுரையில் பின்வருமாறு கூறப்படுகின்றது.

பரிசுத்த விவாக ஆராதனைகளுக்குச் செபப்புத்தகத்திலே இரண்டொரு பகுதிகளை நீக்கி மாற்றியமைக்க வேண்டுமென்பது எனது நீண்ட கால ஆசை. அதற்கு இன்னும் அதிகாரம் எனக்கு வரவில்லை. ஒரு காலம் உலக திருச்சபைகளை சேர்ந்து என்னை ஒரு பெரிய மகாத்மா ஆக ஏற்றுக்கொள்ளுமானால் இச் செபங்களைத் திருத்தும் படி அதிகாரம் வழங்குமானால் திருத்த வேண்டும் என்று நான் விரும்பும் செபவாக்கியங்கள் இவைதான்?

"புத்தியில்லா மிருகங்கள் போலத்தேக, இச்சைகளை நிறைவேற்ற வேண்டுமென்று விவாகம் செய்யக் கூடாது" இதிலே நடக்க முடியாத ஒன்றை மணமக்களில் ஏன் சுமத்துவான்? புத்தியில்லாத மிருகங்களைப் போல என்பதை நீக்க வேண்டும். அல்லது அதை நீக்கக் கூடாது என்றால் புத்தியுள்ள மிருகங்களைப் போல் என்றாவது மாற்ற வேண்டும்.

இந்த புது யுகத்திலே புருசனை கனப்படுத்தும்படி சொல்லும் வாக்கியமும் பெரிய சங்கடமாயிருக்கின்றது. பெண்ணுக்கு ஆண் சமம் இன்னும் சில காலம் செல்ல ஆண்களே தங்கள் உரிமைகளுக்காகப் பெண்களிடம் போராட்டம் செய்ய வேண்டிய காலம் வரும் என இற்றைக்கு முப்பத்தெட்டு வருடங்களுக்கு முதலே விடிவெள்ளியவர்கள் நயம்படக்கூறியுள்ளார். எனவே பெண் தன் புருசனை எப்படி கனப்படுத்துவது? அதை எடுக்கலாம் அப்படி எடுக்க விரும்பாவிடில் "கனப்படுத்தி" என்பதை "ஈனப்படுத்தி"என்று ஒரு எழுத்தை தானே மாற்றலாம் எனக் கூறியுள்ளார்.

மூன்றாவது திருத்தமாக "பிறர்முகம் பாராது" என்ற சொற்றொடரை உடனே எடுக்க வேண்டும். இன்று சமுதாயக் கடமைகளை, ஸ்தாபன வேலைகளை, ஊழியங்களை ஓடிச்செய்கின்ற கிறிஸ்தவ அடியார் இதை செய்யாது எப்படி தலையைக் குனிந்து பேயர் பித்தராக வாழ்வது என்பது தான் எனக்குப் புரியவில்லை. பெரிய இடங்களில் பிறர் முகம் பார்ப்பது ஒரு ஊழியத்துடன் சேர்ந்த அம்சமாகவே இருக்கின்றதை நாம் யாவரும் வெளியே சொல்லப் பயத்தாலும் உள்ளத்தில் ஒத்துக்கொள்கின்றோம். அல்லவா? ஆகவே இதையும் எடுக்க வேண்டுமென்று எடுத்துக் கூறுகின்றார்.

# ஒளிரும் விடிவெள்ளியின் பயணம்

ஒரு கவிஞன் ஒரு காலத்தின் கண்ணாடியாகவே இருக்கின்றான். காலத்தைக் கணிப்பிட்ட கவிஞன் அதிக நாள் இருப்பதில்லைப் போலும். அதனால் தான் என்னவோ காணாமல் போய் விடுகின்றான்.

"எல்லாம் அலங்கோலமோ?
இதுவும் என் காலமோ? மோச
உலகினிலே - நல்லோரின்
முடிவும் இதுதானோ?"

எனப் பாடினார் பட்டுக்கோட்டையார். 29 வயதில் அவர் காணாமற்போனார்.

"எனக்கு முன்னே - சித்தர்
பலர் இருந்தாரப்பா - யானும்
வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்."

எனக் கூறி வாழ்ந்த புரட்சிக் கவிஞன் பாரதியாரும் கூட 39 வயதில் காணாமற் போனார்.

"பாவத்தின் பாரத்திலே
வாழ்கின்ற எங்கள் வாழ்வில்
ஆவியின் மழை தாராய்
ஆனந்த வான் பரனே"

எனப் பாடிய எமது விடிவெள்ளியவர்கள் தனது 50 வயதின் நிறைவைக் காணுமுன் 49 வயதில் அவரும் காணாமற் போயினர். இவ்வுலகிலிருந்து காணாமற்போவதற்கு அவருடைய குறுகிய காலத்துக்குள் மிகவும் விசாலமான பணியினைச் செய்ய முற்பட்டதே அவர் எம்மை விட்டுப் பிரிந்து செல்வதற்குக் காரணமாக அமைந்தது.

உலக வரலாற்றில் கறுப்பின மக்களுக்காகப் பாடுபட்டு அவர்களும் சுய மரியாதையுடன் இவ்வுலகில் வாழவும், இறைவனைத் தேவாலயங்களில் வந்து வழிபடவும் வெள்ளையர்களைப் போன்று சம உரித்துடையவர்கள் என அவர்களுக்காகப் பாடுபட்ட மார்ட்டின் லூதர்கிங் தனது 33வது வயதில் மறைந்தார். எனவே இதனைப் பற்றிக் க.பே.முத்தையாவின் ஆத்ம நண்பனும் இன்றும் அவரின் நினைவுகளினால் மிகவும் அழுத்தப்பட்டிருப்பவருமாகிய கவிஞர் யாழ் ஜெயம் அவர்கள் அவரின் திடீர் மரணத்தைப் பற்றிக் கூறுகின்ற போது "இவ்வுலகில் ஒருவன் எப்போது பூரணத்துவம் அடைந்து வாழ்கின்றானோ அவன் இவ்வுலகத்துக்குரியவன் அல்ல. அவன் கடவுளுக்கு உரியவன். பூரணத்துவம் அடையாதவனுக்கே அவன் பூரணத்துவம் அடையும் படி பல சந்தர்ப்பங்களை அளித்துக் கொண்டிருக்கிறார்" எனக் கூறி இறைவன் ஆயுளை ஒருவனுக்கு அதிகமாகக் கொடுப்பது அவன் திருந்தி வாழ்வதற்கு. அதேவேளை ஆயுளைக் குறைத்து ஒருவனுக்குக் கொடுப்பது அவனுக்குக் கூட்டிக் கொடுத்தால் அவன் பூரணத்துவ நிலையிலிருந்து பிறழ்ந்து பாவத்துக்குள் விழுந்துவிடுவான் என்பதே எனது அபிப்பிராயம்" எனக் கூறிக் கொண்டார். க.பே.முத்தையா அவர்களின் வாழ்க்கையுடன் பார்க்கின்ற போது அது சாலப் பொருந்தியதாகவே இருக்கின்றது. இவ்வுலகில் அவர் வாழும் போதே மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். அதற்கான கேள்வியையும் எழுப்பி, விடையையும் கண்டு கொண்டவராகத் தனது வாழ்நாளை முடித்துக் கொண்டார்.

அவர் இறப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன் நல்லூர் சாதனா பாடசாலையில் கற்பித்த திருமதி. செல்லத்துரை ஆசிரியரைப் பார்த்து நான் ஒரு உண்மையான கிறிஸ்தவனா? எனக்கு மரணம் வந்தால் நான் எங்கு போவேன்? கடவுளிடம் போவேனோ அல்லது நரகத்துக்குப் போவேனோ? எனக் கேள்வி எழுப்பினாராம். அவ்வேளை அங்கிருந்த திருமதி.டானியல் என்னும் ஆசிரியர் கூறியதென்னவெனில் "சேர் நீங்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவன்" தான் எனக் கூறினாராம். அப்போது விடிவெள்ளியவர்கள் கூறியது என்னவெனில் "நான் உண்மையான கிறிஸ்தவன் எனில் நான் கிறிஸ்துவின் கொள்கையைப் பரப்ப நான் தனி மனிதனாக இருக்கவில்லையே" எனக் கூறிக் கவலைப்பட்டராம்.

க.பே.முத்தையா இறப்பதற்கு முன் இறுதியாகப் பார்த்து அவருடன் உரையாடிய உரையாடலை இந்நாளளவும் மனதில் நிறுத்தி வேதனைப் படுகின்றவராக இருக்கும் கவிஞர் யாழ்.ஜெயத்துடன் பேசுகின்ற போது அவர் கூறியதாவது–

"முத்தையா மாஸ்டரை ஒரு தடவை உடம்பைப் பரிசோதிக்கும்படி டாக்டர் சிவஞானசுந்தரம் அவர்கள் கூற நான் கொழும்புக்குப் போய் வந்த பின்பு தான் பரிசோதிக்க வேண்டும் என்றும், அதற்கு முதல் "அன் சீன்" என்ற திரைப்படத்தை நானும் ஜெயம் மாஸ்டரும் பார்க்க வேண்டும் எனக் கூறினாராம். அதற்கு முதல் நாள் தனது நண்பருடன் பேசுகின்ற போது கேட்டாராம் "மரணம் என்றால் என்ன?" என்று. அதற்கு கவிஞர் ஜெயம் கூறினாராம் "அது மகா பயங்கரம்" என்று. அதற்கு முத்தையா மாஸ்டர் கூறினார் யாழ். கோட்டையில் சிறைக் கைதியாகப் பல வருடம் இருக்கும் யப்பான் நாட்டுக் கைதிக்கு அன்று இரவு "நாளை உனக்கு விடுதலையளிக்கப்படும். நீ உனது வீட்டுக்குச் செல்லலாம்" என்றால் அவனுடைய மனம் எவ்வளவு சந்தோஷப்படும், இரவு முழுவதும் தூங்குவானா? தனது தாய் தகப்பனை நினைத்து சந்தோஷம் அடைவான் அல்லவா? அதே போலவே தான் மரணம் எமக்கு அப்பா வீட்டை போகின்றோம் என்ற சந்தோஷத்தை அளிக்கும் அல்லவா?" என விடை பகர்ந்தாராம். இது தான் அவர் என்னுடன் கடைசியாகக் கதைத்த கதையாகும். அவரின் மறைவுக்குப் பின்னாளில் பாதுகாவலன் எனும் சஞ்சிகையில் யாழ்.ஜெயம் அவர்களால் "அப்பா வீட்டுக்குப் போகின்றேன்" என்ற கட்டுரைத் தொடராக எழுதப்பட்டது. தான் கடைசி மட்டும் மருத்துவமனையில் இருப்பதைத் தனது நண்பன் ஜெயத்துக்குத் தெரிவிக்க வேண்டாம் எனத் தனது மனைவியிடமும், பிள்ளைகளிடமும் கூறியிருந்தார்.

ஏனெனில் தனது நண்பன் மருத்துவமனையில் தங்கியிருப்பதைக் கேள்விப்பட்டால் திரு.ஜெயம் அவர்கள் தனது நேரத்தையும், ரியூசன் வகுப்புக்களையும் மருத்துவமனையில் செலவழித்து விடுவான் என்று தெரிந்தே "கூற வேண்டாம்" எனக் கூறினார். விடிவெள்ளியவர்கள் மருத்துவமனையில் தங்கியிருக்கும் போது மருத்துவமனையில் அவர் தங்கியிருந்த வார்ட் எப்போதும் விடிவெள்ளியவர்களால்

கலகலப்பாகவேயிருந்தது. அவர் இறந்தமை குறித்த தினத்தில் அதிகாலையில் விடிவெள்ளியவர்களுக்கு அருகில் இருந்த கட்டிலில் படுத்திருந்த நோயாளி துண்டு வெட்டி வீடு போகும் போது "குட்மோர்னிங் சேர்" எனக் கூற விடிவெள்ளி அவர்கள் "பேட் மோர்னிங்" எனக் கூறினாராம். ஏனெனில் அவரைப் பிரிவதில் கூட வேதனையடைந்தார். தான் எங்கள் அனைவரையும் விட்டுப் பிரிவதை நினையாமல்.......!

விடிவெள்ளி அவர்களைத் தனிப்பட்ட ரீதியில் கவனித்த அப்போதைய யாழ்.மருத்துவமனையில் கடமையாற்றிய டாக்டர் ஆனந்தராஜா துண்டு வெட்டி அனுப்பிவிட மனதாயிருந்தார். ஏனெனில் அவரின் உடல் எவ்வித நோயின் அறிகுறியும் கொண்டு காணப்படவில்லை. அன்று மதியம் டாக்டர் நந்தியும் அவருடைய தம்பி திருநாவுக்கரசுவும் விடிவெள்ளி அவர்களைக் காண மருத்துவமனைக்குச் சென்ற போது நந்தி அவர்களைக் கண்ட விடிவெள்ளி அவர்கள் அவரைப் பார்த்துக் கூறியது என்னவெனில் "உங்களைப் பார்த்து விட்டுத்தான் கண் மூட இருக்கின்றேன்" எனக் கூறினாராம். இது தான் அவர் டாக்டர் நந்தியுடன் கடைசியாக உரையாடிய வாசகமாகும். நந்தியும் அவருடைய தம்பியும் விடிவெள்ளி அவர்களைப் பார்த்து விட்டுப் படியில் இருந்து இறங்கி வர ஒரு தாதிப்பெண் ஓடி வந்து கூறியது என்னவெனில் உங்களது நண்பருக்கு மீளவும் மாரடைப்பு நிலையில் அவசர சிகிச்சை வார்ட்டுக்குக் கொண்டு போகின்றார்கள் எனக் கூறிய போது - தான் தீர்மானித்து விட்டாராம் தனது நண்பர் தன்னை விட்டுப் பிரிந்து போகப் போகின்றார் என்று. இன்று கூட என்னுடன் விடிவெள்ளி அவர்கள் உரையாடிய சில மணி நேரத்தைச் சிந்தித்துப் பார்க்கையில் மன வேதனையாகவுள்ளது என டாக்டர் நந்தி அவர்கள் நினைவுகூர்ந்தார்.

அவருடைய நண்பனாகிய திரு.நந்தியவர்களே தனது நண்பனுக்குரிய ஈமக்காரியங்களை முன்னின்று செய்தார். க.பே.முத்தையா அவர்களின் உடலை Massage பண்ணுவதிலிருந்து em balm வரைக்கும் சகல வேலைகளையும் தனது கையினாலேயே தனது நண்பனுக்குச் செய்தார். ஏனெனில் வேறு யாருடைய கையாவது பட அவர் விரும்பவில்லை. இதனைப் பின்வருமாறு தாயுமானவர் கூறுவதைப் போன்று கூறிக் கொள்ளலாம்.

"எனக்குள் நீ என்றும் இயற்கையாய்ப் பின்னும்
உனக்குள் நான் என்ற உறுதி கொள்வ தெந்நாளோ?"

என்ற ஏக்கத்துடன் தனது நண்பனுடன் இறுதிவரை இருக்க விரும்பினார். என் நெஞ்சத்தைக் கிளறி என் நெஞ்சத்தைக் கிள்ளியவர் க.பே.முத்தையா எனக் கூறும் யாழ். ஜெயம் அவர்கள், விடிவெள்ளி அவர்கள் மறைந்த செய்தி தனக்குத் தெரியாது என்றும் தான் கொழும்புக்குப் போய் விட்டார் என எண்ணியபடி இருந்தேன். பாண்டியன் தாழ்வு எனும் இடத்திற்கு மாலை நேர வகுப்புக்களை நடாத்துவதற்குச் செல்லும் போது வழியில் வைத்து ஒரு பையன் வந்து "முத்தையா மாஸ்டர் வீட்டை உடனடியாக வரும்படி அவர் மனைவி கூறி விடும்படி சொன்னார்கள்" என அப்பையன் கூறி விட்டுச் சென்றான். அதைக் கேட்டு நான் அங்கு சென்ற போது அவருடைய மனைவி கூறிய செய்தியினைக் கேட்ட போது,

"மெய்யெல்லாஞ் சோர்வு , விழியில் மயக்கமுற,
உய்யும் வழியுணரா, துள்ளம் பதைபதைக்க,
காணும் துயரும் நலிவுறுத்த நான்மீண்டு"

உடனடியாக யாழ்.மருத்துவமனைக்குச் சென்று என் வாழ்வின் விடிவெள்ளியை அதன் பிரகாசம் மங்கும் முதல் பார்க்க விரைந்தேன். அங்கே விடிவெள்ளி அவர்களைக் கட்டிலின் மீது கிடத்தி வைத்திருந்தார்கள்.

"வான வீதியில் ஓடி உலாவும் சோதி, விடிவெள்ளி!
வானுலகினிலே ஒளியை வழங்கும் மறையா, விடிவெள்ளி
மண்ணுலகனைத்தும் போற்றிப் புகழும் மனனே, விடிவெள்ளி!
நீ மறைந்தாயேனோ மறுமை நோக்கி அன்பா, விடிவெள்ளி!

அங்கு வைத்தியரும், நந்தியவர்களும் இருந்தார்கள். நான் அவர்களிடம் கேட்டேன். ஒரு தடவை முகத்தைப் பார்க்கலாமா? என்று, அதற்கு வைத்தியர் கூறினார். "ஜெயம் மாஸ்டர் உங்களுக்கு இல்லாத உரிமையா? எங்களுக்கு இருக்கு, முத்தையா மாஸ்டரிடம்" என விடை பகர்ந்தார். அங்கு விடிவெள்ளி அவர்களின் முகத்தினைத் திறந்து பார்த்த போது "ஆயிரம்

ரோஜா மலர்களை வைத்திருக்கின்றதைப் போன்ற பிரகாசமாக அவருடைய முகம் இருந்தது. அவர் இறந்து 3 மணிநேரம் கடந்தும் கூட அவ்வாறே அவருடைய முகம் காணப்பட்டது. ஏனெனில் "அவருக்கு அப்பா வீட்டுக்குப் போக வேண்டும்" என்ற சந்தோஷம் தான்.

"செத்து நானும் நம்மையே
சேர்த்தணைத்துத் துதிக்கவே
பக்தர் பணிந்து மகிழவே
வந்தார் இயேசு உயிர் பெற்றே"

நான் அவரின் உடலுக்குள் உயிர் இருக்கிறது என்றெண்ணி உடனடியாக அருகிலிருந்த வைத்தியரிடமும், நந்தி அவர்களிடமும் "மசாச்" (Massage) பண்ணிப் பார்ப்போமா எனக் கேட்டேன். அதற்கு வைத்தியர் "மாஸ்டர் உங்களைப் போன்று தான் நாங்களும் எண்ணி 2 மணித்தியாலயம் தொடர்ந்து "மசாச்" (Massage) பண்ணிப்பார்த்து விட்டோம்" எனக் கூறினார்கள். எனவே இவருடைய மரணச் செய்தி யாழ். நகரையே ஒரு உலுக்கு உலுக்கியது எனலாம். ஏனெனில் யாழ்ப்பாணத்தில் ஒரு சாதாரண பாமரர் தொடக்கம் பேரறிஞர் வரை ஒரு நண்பனாக, ஆசிரியராக, பேச்சாளராக, கவிஞராக, எழுத்தாளராக, ஊக்குவிப்பாளராக சமூகத்தில் மிளிர்ந்த பலரும் இவரை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனைப் பற்றி முத்தமிழ்ப் புலவர் ஜே. எஸ். ஆழ்வார்ப்பிள்ளை அவர்கள் தனது பிரிவிரக்கக் கவியில் பின்வருமாறு பாடுகின்றார்.

"பாயில்லைப் படுக்கையில்லைப் பகிர்முக மாக வேதும்
நோயில்லை வைத்தியமில்லை நூதனம் புதினத் தாளில்
மாயமா யுனக்கு நேர்ந்த மரணச்சங் கதியறிந்தோம்
நேயனே யுனைநினைக்க நெஞ்சம்புண் ணாயிற்றையோ"

எனப் பாடி அவருடைய திடீர் மரணத்தை எடுத்துக் கூறியது மட்டுமல்ல அவருடைய மரணச் செய்தியினைக் கேட்ட போது அது எவ்வாறானதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது எனப் பார்ப்போமானால்,

"இடியது கேட்ட சர்ப்ப மென்னநா மோங்கி நின்று
துடிதுடிக் கின்றோங் கூடிச் சோபன மகளாருக்குத்
திருமணஞ் சென்ற திங்கள் களிப்போடு நிகழ்த்திவைத்தாய்
குடியது தழைக்கும் வேளை கொழுத்தது மடிந்ததென்ன!"

தனது மரணத்தின் முன்பு தனது மகளினுடைய திருமணத்தைச் சிறப்பாக நடாத்த வேண்டும் என்பதை எண்ணியவர் போலும் என்னவோ வெகு சிறப்பாக அதனை நடாத்தி முடித்த பெருமை அவருக்கு இருந்தது. அத்திருமணத்திற்கென்று சோடித்திருந்த சோடனைகள் கூட வீட்டில் கழற்ற முதல் அவருடைய மரணம் நேர்ந்து விட்டது.

"மணவிதனை யதனை யாற்றி மாசமொன் றாகுமுன்னர்
பிணவினை யாற்ற நேர்ந்த பீடையோ பெரியபீடை
ஆனதுணை யாகிப் பல்லோர்க் காதவராயிருந்த
குணமெனுங் குன்றே நம்மைக் கூடிப் பிரிந்ததென்னே!

அனைத்துயிர்களுக்கும் ஆதரவாக இருந்த குணாளனே எப்படி எம்மை விட்டுப் பிரிய மனம் வந்தது? இச்செய்தி ஒரு பொய்யாக இருக்க முடியாதா, என ஏங்குகின்றார்.

"நையவே யெமை விடுத்து நடு வழியதிற் பிரிந்து
பையவே மறைந்து விட்டாய் பரிதாப நிலையைக் காண
மெய்யது விதிர்க்குதென்னே! மெய் பொய்யென்பது
மெய் மெய்யே"

விடிவெள்ளி அவர்கள் மறைந்த தினமான 1964ம் ஆண்டு வைகாசி மாதம் 26ம் திகதி – இதற்கு அடுத்த நாள் தான் இந்தியாவின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த "நேரு" அவர்களும் மறைந்தார் எனச் சுட்டிக் காட்டுவது சிறப்பானதாகும்.

இறுதியாக விடிவெள்ளியவர்களின் இவ்வுலக வாழ்வின் இறுதிப் பயணத்திற்குத் தயார்ப்படுத்துவதற்காக அவரின் நண்பராக "யாழ்.

ஜெயத்தை" வந்து பெட்டியை மூடும் படி கூறினார்கள். அவ்வேளை முதல் "நான் கண்ட அதே பிரகாசமான முகப் பொலிவு எவ்வித மாறுதல் இல்லாமல் அப்படியே இருந்தது. என் வாழ்நாளில் அப்படியொரு பிரகாசமான இறந்த உடலை நான் இன்னும் காணவில்லை" என யாழ் ஜெயம் அவர்கள் கூறினார்.

"பள்ளிச் சிறுவரெல்லாம் பதைபதைத்து நீர் மல்க
வள்ளுவர் தினமதிலே வான் சென்றாய் – வெள்ளி நீ
ஆங்கள்ளிக் கொடுக்கின்ற அருமறையின் கவியமுதை
ஈங்கு வாங்காயோ எமக்கு"

விடிவெள்ளி அவர்களின் இறுதி அஞ்சலியினைச் செலுத்துவதற்காகப் பல இடங்களிலிருந்தும் பல்வேறு சமூகத்தினரும் வந்திருந்தார்கள். இதனைப் பற்றி மறைந்த எமது பேராயர் அதி.வண.எஸ். குலேந்திரன் அவர்கள் குறிப்பிடும் போது – "தூர இடங்களிலிருந்தெல்லாம் அநேக மக்கள் அவருக்கு அஞ்சலி செலுத்த வந்திருந்தனர். இது அக்காலத்தில் வாழ்ந்த பெரியோர்களுள் இவரும் உயர்ந்த ஒருவர் என்பதையே எடுத்துக் காட்டுகிறது எனக் கூறுகின்றார்.

"The Judgements of crowds are often wrong; but when they are right, they can be very right. The attendance at a funeral is often due to the fact that the deceased belongs to his official position. K.P. Muthiah come from a remote and non - populus village. He did not walk in the high places of the earth or sit in the seate of the mighty. yet the crowds that thronged his funeral last wednesday can only be described as stunning. People kept coming from all class and strata ever since they heard of his death. At the funeral itself the crowd were milling. The attendance was a tribute to his greatness. Any one who thinks that he was not one of the great figures of our time has a very wrong set of values."

திரு. சொக்கன் அவர்கள் குறிப்பிடும் போது "கிறிஸ்தவ சமூகம் என்பது இவ்வளவு பெரிய விசாலத் தன்மையினைக் கொண்டிருக்கும் என்று அன்று தான் அறிந்து கொண்டேன். ஒரு கோயில் தேர் வீதி உலா வரும் போது எவ்வாறு பக்தர்கள் புடை சூழ்ந்திருந்து காணப்படுவார்களோ அவ்வாறே அவருடைய அடக்க ஆராதனையிலும் மக்களும் புடைசூழ்ந்து காணப்பட்டார்கள். இறுதி நேரத்தில் எமக்கு ஒரு பிடி மண்ணாவது போட முடியாமல் போய் விட்டது. அதிக ஜனத்திரள் காணப்பட்டதினால் முன்னுக்குப் போக முடியாமல் போய்விட்டது என மிகவும் மனவருத்தத்துடன் கூறினார்.

"அங்கமெலாத் தங்கமெனத் திகழ்ந்தாய் அன்பின்
அலைகடலாய் உந்தனுளந் திறந்தாய் வானத்
திங்களெனக் கருணையொளி பொழிந்தாய் வாழ்வில்
திசையனைத்தும் சேவைசெயப் பிறந்தாய் எங்கும்
பொங்குமலர்ப் புன்னகையைச் சொரிந்தாய் யேசு
போதனையாம் வாழவதனிற் கலந்தாய், இன்றோ
எங்களுயிர் கவர்ந்தோடி மறைந்தாய் ஐயா!
ஈசனடி நிழலிலே இன்பங் காண்பாய்".

இவ்வாறு க.பே. முத்தையா அவர்களினுடைய நண்பன் விக்டர் அவர்கள் அவருடைய பிரிவினைக் குறித்துப் பாடுகின்றார்.

விடிவெள்ளியவர்களின் மறைவின் செய்தியைக் கேட்டும், அறிந்தும் பல அன்பர்கள் விடிவெள்ளியவர்களின் கவிதைகளையும், கட்டுரைகளையும் தொகுத்து வெளியிடுமாறு கூறித்தங்களால் இயன்ற பண உதவிகளை மானிப்பாயில் இயங்கி வந்த அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

இவருடைய மறைவுக்குப்பின் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் ஆராதனைகளும், வழிபாடுகளும் நடந்தது. அவருடைய ஆத்மா சாந்திக்காக கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் ஒரு திருவிருந்து வழிபாடு நடந்தது. உதயதாரகையின் இலக்கிய மன்றத்தினதும், நவாலி இறையியற்

கழகத்தினதும் ஆதரவின் கீழ் 14ம் திகதி செப்ரம்பர் மாதம் 64ம் ஆண்டு மாலை ஒரு அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. இதில் பலரும் பல்வேறு சமயத்தவரும் உரை நிகழ்த்தினர். அத்துடன் நல்லூர் சாதனாப் பாடசாலையில் 25.06.64 அன்று அவருடைய நினைவு அனுஷ்டிக்கப்பட்டது. இதில் அவருடைய உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் "திரு.க.பே. முத்தையா வெளியிட்ட கவிதைகள்" என்ற மகுட நாமத்தோடு அவை நூல் உருவத்தில் வெளியிடப்பட்டது. பல ஆசிரியர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்கள்.

திரு. க. சொக்கலிங்கமும், திரு. மீனாட்சிசுந்தரம் (நந்தி) தங்கள் பெரும் முயற்சியினால் "விடிவெள்ளிக் கவிதைகள்" என்ற நூலை வெளியிட்டார்.

> "எடுத்தது முடிக்க வல்லாய்! எவரையும் வசியம் பண்ணித்
> தொகுத்தது முடிக்க வல்லாய்! சூழ்ச்சியில் வல்லாயென்றும்
> அடுத்தவர்ப் பிரியா நல்ல அன்பிற்கு வல்லாயெங்கும்
> படித்தவர் போற்றும் வல்ல பண்டிதா! மாண்டதென்ன!

விடிவெள்ளியவர்களுக்கு ஒரு ஆசை இருந்தது. அது என்னவெனில் இந்தியாவிற்குத் தனது நண்பர்களுடன் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம். அவ்வெண்ணத்தில் திரு. நந்தி அவர்களும் அவருடைய தாயாரும், அடுத்து திரு. க. சொர்க்கலிங்கம் (சொக்கன்) ஆகிய நால்வரும் இந்தியா செல்ல வேண்டுமென்று எண்ணியிருந்தார்கள். ஆனால் அதற்கிடையில் விடிவெள்ளியவர்கள் தனியாக இவ்வுலகை விட்டு "அப்பாவின் வீட்டைச் சென்று விட்டார். அதற்குப் பின்பு இன்று கூட எவ்வளவோ சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் இவர்களுக்கு இருந்தும் கூட சொக்கனும் நந்தியின் தாயாரும் போவதற்கு விரும்பவில்லை. ஏனெனில் அவ்வளவு ஆழமாக விடிவெள்ளி எல்லோரின் இருதயங்களிலும் தனக்கென இடம் பிடித்துக் கொண்டவர். அவர் மறைந்தும் ஒவ்வொரு இருதயங்களிலும்

வாழ்கின்றவராகவே இருக்கின்றார். இலக்கிய வட்டத்தில் திருச்சபைச் சட்டத்தில் அவரின் நினைவுகள் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றது.

"ஞானவான்கள் ஆகாயமண்டலத்தில் ஒளியைப் போல
(விடிவெள்ளியாக) இருப்பார்கள்"

தானியேல் 12:03

"உமக்கென்று பாடுபட்டேன், நஷ்டப்பட மாட்டேனோ
உமக்கென்று ஜீவன் விட்டேன், சாகா ஜீவன் பெற்றேனே".

இவ்வாறாக எமக்குள் வாழ்ந்து மறைந்த அமரர்.கந்தையா பேதுரு முத்தையா எனும் "விடிவெள்ளி" திருச்சபை வானிலும் சமூக வாழ்வியலிலும் மிளிர்ந்த காலம் ஒரு பொற்காலமாகும். "விடிவெள்ளி" ஒரு பரந்த ஊற்று. இந்த பரந்த ஊற்றிலே இருந்து பிரககித்த நீர்நிலைகள் பலவாகும்.

அவர் ஒரு சிறந்த தமிழ் வித்துவானாகவும், இயேசு பிரானில் பேரன்பு கொண்டவராகவும் அவர் வாழ்வு இருந்தது. செந்தமிழின் வளர்ச்சியும், சிலுவையின் உயர்வும் அவருடைய வாழ்வின் இரு இலட்சியங்களாகத் திகழ்ந்தன. இவர் வாழ்ந்த காலத்தின் பெரும்பகுதி ஆங்கிலேயே ஆட்சிக் காலமாகவே அமைந்தது. 16 வருட காலமே அவர் சுதந்திர இலங்கையில் வாழ்ந்தார். நாட்டிலும், திருச்சபையிலும் ஆங்கில மோகமே அதிகமாகக் காணப்பட்டது. கிறிஸ்தவத்தையும் தமிழையும் சுதேச மயப்படுத்துவதிலும், அதனை அழியாமல் பாதுகாப்பதிலும், தன் வாழ்வின் பெரும் பகுதியையே அர்ப்பணித்தவர்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், எண்ணில்
நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை"

என்று குழந்தை ஞானியான திருஞான சம்பந்தரின் பாடல் வரிகளின் முத்தாப்பாய் அமைந்தது தான் எமது விடிவெள்ளி அவர்களின் வாழ்க்கை. மண்ணில் நல்ல வண்ணம் வாழ விரும்புவோர் குறிப்பாக இளையதலைமுறையினர் தங்கள் மனதில் கல்வெட்டாய் பொறித்து வைத்து நினைவு கூறும் வாழ்வை வாழ்ந்தவர் தான் அமரர்.க.பே.முத்தையா அவர்கள்.

Note:-



# வாழ்த்துரை

"விடிவெள்ளி க.வே முத்தையா பதிவுகள்" என்ற நூலை எழுதிய வண இ.ராஜ்குமார் அவர்களை கடந்த 20 வருட காலமாக நான் அறிவேன். திருப்பணிக் காலத்தில் நானும் அவரும் இணைந்து பணியுரிந்த அனுபவம் எனக்கு உண்டு, கிறிஸ்தவ சாட்சியத்திற்காக பயணிக்கும் அவரது உறுதியான வாழ்க்கைப் பயணத்தின் எல்லாச் சுவடுகளையும் நான் அறிவேன்.

நியாயத்தின் தேடல்களுக்காய், நீதியின் பார்வை களுக்காய் கிறிஸ்தவ சாட்சியத்தின் உறுதிப்பாடுகளை சமர்ப்பணம் செய்கின்ற அவரது செயற்றிறன் என்னை மிகவும் அவர்பால் ஈர்த்திருக்கின்றது. இலக்கியத் துறையில் அவர் காட்டும் ஆர்வத்தின் ஒரு வெளிப்பாடே திரு. க.வே முத்தையாவின் வாழ்க்கை வரலாறாக மிளிர்ந்திருக்கின்றது. என் தூய்மையான பார்வையின் எல்லைக்குள் நிற்பவர்களில் வண I. ராஜ்குமாரும் ஒருவர். நான் எப்போதும் அவரை ஒரு சீரிய மனிதராக பார்க்கும் பழக்கம் உண்டு. அவரது திருச்சபை வாழ்வும், சமூக வாழ்வும் பிரிக்கமுடியாத ஒரு சக்கரத்தை போன்று பயணிக்கும் ஒரு பாக்கியசாலியை சந்தித்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இவரது சமூகப் பார்வை களின் எல்லைகள் என்றும் விரிந்து செல்லட்டும்.

என்றும் அன்புடன்

வண T.S யோசுவா
நிறைவேற்று இயக்குனர்
காவேரி கலா மன்றம்

…ழன் பதிப்பகம், கிளிநொச்சி.